Registered as a news paper.
பக்கங்கள்: பன்னிரண்டு
விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 தை 27 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 துல்ஹிஜ்ஜா 10 (10.02.2003) திங்கட்கிழமை இதழ் :131



ஒறிஜினல் கோலம் சாறி, பட்டு வேட்டிகள், கோலம் கூறை சாறிகள், பட்டு வேட்டி வகைகள் மற்றும் றெடிமெட் ஆடைகள், பல் வேறு ரக துணி வகைகள், பிளவுஸ் துணி வகைகள் யாவற்றுக்கும் வருகை தாருங்கள்

சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்

41, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

T.P.No.
222 2063

(சி551)

## உரிய தீர்வை அரசு தராவிட்டால் பிரிவதைத்தவிர வேறுவழியில்லை!

### தலைவர் கருத்தை பாலா ஜேர்மனியில் வலியுறுத்து



சமாதானப் பேச்சுவார்த்தைகள் நல்லமுறையில் நடந்துவருவதாகவே உலகம் நம்புகின்றது. ஆனால் அரசாங்கம் அவ்வாறான நிலையிலில்லை. ரணிலுடைய ஆட்சியைக் கலைப்பேன் என ஜனாதிபதி சந்திரிகா அடிக்கடி மிரட்டி வருகிறார். எனவே, நல்லதொரு தீர்வு தரப்படுமா என்பது சந்தேகமே.

ஆனாலும் நாம் யுத்தத்தை விரும்புகின்றவர்கள் அல்லர். சமாதான வழியில் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையிலேயே பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளோம். இதை உலகம் புரிந்துகொள்ள வேண்டும் என கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

ஜேர்மனியில் டோட்முண்ட் நகரில் நேற்று நடந்த 'களமும் புலமும்' நிகழ்ச்சியில் பேசும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசும்போது, நெடுந்தீவுக் கடலில் அநியாய உயிரிழப்புக்கள் நடந்த போதும் நாம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

புலிகளின் படகு இந்தியப் பதிவிலிருந்தது

## கண்காணிப்புக்குழு அறிக்கை; இந்திய அரசாங்கம் கண்டனம்!

இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் அறிக்கைகளை வெளியிடுகின்றபோது- ஒன்றுக்கு இரண்டு தடவை ஆராய்ந்துவிட்டு வெளியிட வேண்டும் என இந்தியா தெரிவித்துள்ளது.

நெடுந்தீவுக் கடலில் வெடித்துச் சிதறிய புலிகளின் படகு இந்தியாவில் பதிவுசெய்யப்பட்டது என, போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் ரெய்ரூர் ரொக்கில்சன் தெரிவித்திருந்த கருத்துத் தொடர்பாகவே இந்தியா இவ்வாறு தெரிவித்திருக்கிறது.

இது தொடர்பாக இந்தியத் தூதரக வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கையில், நோர்வேஜியர்கள் சொல்வது எதையும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது பற்றிக் கவலைப்படத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

**தென்னாபிரிக்க அணியை மேற்கிந்தியத் தீவுகள் அணி வென்றது. மேலும் விபரம் கடைசிப் பக்கத்தில்.**

# புலிகளின் அரசியல் விவகாரக் குழுவினர் அடுத்த மாதம் வெளிநாடுகளுக்குப் பயணம்

### விண்ணாணம் விநாசியர்



தெற்கில் என்ன சொன்னாலும் உலகம் உண்மைய உணர்ந்துவரும் கண்டியே...

## சர்வதேசரீதியில் சமஷ்டி பற்றி ஆராய்வர்

(நமது நிருபர்)

**உலகிலுள்ள சமஷ்டி அமைப்பு நாடுகளிலுள்ள அரசியலமைப்புக்களை நேரில் ஆராய்வதற்காக - விடுதலைப் புலிகளின் அரசியல் விவகாரக்குழு அடுத்த மாதம் தனது வெளிநாட்டுப் பயணத்தை ஆரம்பிக்கவுள்ளது.**

முதற்கட்டமாக நோர்டிக் நாடுகள், ஸ்கண்டிநேவிய நாடுகள், சுவிற்சர்லாந்து, ஜேர்மனி என இந்தப் பயணம் தொடராக நடைபெறவுள்ளது.

அந்தந்த நாடுகளிலுள்ள சமஷ்டி அரசியற் கட்டமைப்பு, யாப்பு மற்றும் நிர்வாக முறைகள், அதிகாரப் பரவலாக்கம் பற்றிய நேரடி ஆய்வினை விடுதலைப் புலிகளின் அரசியல் விவகாரக்குழு மேற்கொள்ளும்.

அதிகாரப் பரவலாக்கல் விடயங்களை ஆராய்வதற்காக விடுதலைப் புலிகள் அமைத்துள்ள அரசியல் விவகாரக்குழுவில் இடம்பெறுவோர் விபரம் விரைவில் அறிவிக்கப்படும் எனவும் தெரியவருகின்றது.

இந்தக் குழுவினர் தாம் ஆராய்ந்து

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மதில் சரிந்து வீழ்ந்ததில் மாணவன் துடிதுடித்துப் பலி!

### ஏழாலையில் நடந்த பரிதாப சம்பவம்

ஏழாலை சன்மார்க்க வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டியைப் பார்க்கச் சென்ற மாணவன் சுற்றுமதில் சரிந்து வீழ்ந்ததில் துடிதுடித்துப் பலியானார்.

நேற்று மாலை 3.15 மணியளவில் நடைபெற்ற இந்தப் பரிதாப சம்பவத்தில் மல்லாகம் மகா வித்தியாலயத்தில் ஏழாம் வகுப்பில் கல்வி கற்கும் கருணாநிதி பகீரதன் (வயது 12) என்பவரே துடிதுடித்துப் பலியானார்.

மேற்படி பாடசாலையின் பழைய மாணவனான இவர், மெய்வல்லுநர் நிகழ்வைப் பார்த்துவிட்டு சுற்றுமதிலிருந்து இறங்கியவேளையே மதில் சரிந்து வீழ்ந்ததில் மரணமானார்.

இவரது சடலம் மரண விசாரணையின் பொருட்டு தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ச,68)

## அரசாங்கமும் புலிகளும் சமபலமுள்ள சக்திகளே

### ஐரோப்பிய யூனியன் வதிவிடப் பிரதிநிதி வோல்ரர் வில்சன்

தற்போதைய நிலையில் இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் சமபலமுள்ள சக்திகளாக உள்ளன.

எனவேதான் நாம், இலங்கையில் மேற்கொள்ளப்படவிருக்கும் புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து அரசு மற்றும் புலிகள் ஆகிய இரு தரப்புப் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசி வருகிறோம். இவ்வாறு இலங்கைக்கான ஐரோப்பிய யூனியனின் வதிவிடப் பிரதிநிதி வோல்ரர் எல்.வில்சன் தெரிவித்தார்.

கல்விச் சுற்றுலாவை மேற்கொண்டு யாழ்ப்பாணத்திலிருந்து நேற்றுமுன்தினம் கொழும்புக்குச் சென்ற 750 மாணவ, மாணவிகளை வரவேற்பதற்காகக் கொழும்பு விகா

(10 ஆம் பக்கம் பார்க்க)

### உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

**இன்றைய ஆட்டங்கள்**

| | | | | |
|---|---|---|---|---|
| நியூசிலாந்து | Vs | இலங்கை | - | புளூம்பொன்ரீன் |
| சிம்பாப்வே | Vs | நமீபியா | - | ஹராரே |

### சாவகச்சேரி மகளிர் கல்லூரி அருகே

## காணியை துப்புரவாக்கியபோது எலும்புக்கூடு கண்டுபிடிப்பு!

சாவகச்சேரி மகளிர் கல்லூரிக்கு அருகிலுள்ள வீட்டுக்காணியொன்றில் இருந்து எலும்புக்கூடு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

நேற்று நண்பகல் ஒரு மணியளவில் கந்தையா சின்னம்மா என்பவரது வீட்டுக்காணியைத் துப்பரவுசெய்தபோதே இந்த எலும்புக்கூடு மீட்கப்பட்டிருக்கிறது. எலும்புக் கூட்டுக்கு அருகிலிருந்து இராணுவப்பட்டி ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதில் **Sri Lanka** என் எழுதப்பட்டு

(10ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு இறுதியாக வந்த ஆயுதக்கப்பல் 19 மணிநேரம் தரித்திருந்தது - சந்திரிகா

### அவ்வாறான சம்பவம் எதுவுமில்லை என்கிறார் ராணுவப் பேச்சாளர்

(கொழும்பு)

போர் நிறுத்த உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்ட பின்னர் விடுதலைப் புலிகள் 5 கப்பல்களில் ஆயுதங்களை இறக்குமதி செய்துள்ளார்கள்.

- இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

மகியங்கனையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இறுதியாக வந்த ஆயுதக்கப்பல் 19 மணித்தியாலங்கள் கடலில் தரித்து நின்றது என்றும் கூறினார்.

இதேவேளை - ஊடகங்களில் வெளியானதுபோல அவ்வாறான ஆயுதக்கப்பல் எதுவும் வந்ததாகத் தமக்குத் தெரியவரவில்லை என - இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாரட்ன கொழும்பில் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இது பற்றி அவர் மேலும் கூறுகையில்,

இலங்கைக் கடற்பரப்பில் எந்த

(10ஆம் பக்கம் பார்க்க)

SERENDIB AIRLINE

யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்

021 - 2223916, 0777 - 517019

01-505632, 074-612696, 01-390128

(சி -518)

ராஜா
யாழ்ப்பாணம்.
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தினவெளியீடு
விஜய், ஸ்நேகா நடித்த
வசீகரா



10.30, 2.30, 6.00, 9.30 (சி-545)
ரிக்கற்றுக்களை முன்பதிவு செய்துகொள்ளவும்.

நிறைஞ்சனாஸ் சங்கானை
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
இன்றுமுதல் மாதவன், மீரா ஜஸ்மின் நடித்த
ரன்
வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 காட்சி (சி-544)
THE MUMMY RETURNS


## சிறு விளம்பரம்

### ஆங்கில வகுப்புக்கள்

பல்கலைக்கழக மாணவர்களுக்கான ஆங்கில வகுப்புக்கள். அடிப்படையிலிருந்து சிறு குழுக்களாகக் கற்பிக்கப்படும். உடன் தொடர்பு:- நாகேந்திரம், 34/4, (புதியது 82/24) செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம்.

(235)

### காணவில்லை

KM 654 என்ற இலக்கக் குறியுடைய சாம்பல், வெள்ளை நிறமுடைய பசு மாட்டை கடந்த 15.01. 2003 ஆம் திகதி முதல் காணவில்லை. இதுபற்றிய தகவல் தருவோர்க்கு சன்மானம் வழங்கப்படும். தொடர்பு: சீ.பரமநாதன், இல.15, அரசடி 3 ஆம் ஒழுங்கை நல்லூர்.

(சி-576)

ICC Cricket World Cup South Africa 2003

# சனத்! கனவு பலிக்குமா?

முன்னாள் உலகக்கோப்பை நாயகர்களாகிய இலங்கை அணியும், பல தடவை வெற்றியின் விளிம்



சனத் ஜயசூரிய

புக்கு வந்து கோப்பையைக் கைப்பற்றாமலேயே திரும்பிய நியூசிலாந்து அணியும் இன்று பலப் பரீட்சையில் இறங்க இருக்கின்றன.

ஆரம்பத்தில், உலகக்கிண்ண அணி ஒழுங்குத் தேர்வு நடைபெற்று முடிந்தபொழுது, இலங்கை அணி தன்னுடைய பிரிவு அணிகளைப் பார்த்து ஒருமுறை பெருமைப்பட்டுக் கொண்டது. ஏனெனில், தனக்கு நிகரான அணி தென்னாபிரிக்கா அணி மட்டுமே என்பதால்.

ஆனால், அண்மையில் கிரிக்கெட் போட்டிகளில் ஏற்பட்ட மேடு பள்ளங்களில் எல்லாம் ஏறி இறங்கி இலங்கை அணி உள்ள பிரிவின் பக்கம் தென்னாபிரிக்காவுக்கு நிகரான இரண்டு அணிகள் திடீர் பலம் பெற்று எழுந்து நிற்கின்றன.

அவற்றுள் ஒன்றுதான் இலங்கை அணியுடன் இன்று மோதப் போகும் நியூசிலாந்து அணி. இன்று பகல் ஆட்டமாக G.M.T. நேரப்படி காலை 8 மணிக்கு Good Year Park, Bloem fontein மைதானத்திலே இரண்டு அணிகளும் மோத இருக்கின்றன.

இந்த இரண்டு அணிகளினதும் பலம், பலவீனம் ஆகியவற்றை சற்று ஆராய்ந்து பார்ப்போம்.

முதலில் இலங்கை அணியை எடுத்து நோக்குவோம். சென்ற இடமெல்லாம் தொடர் தோல்விகளை அண்மைக்காலமாகச் சந்தித்து வருகின்ற இலங்கை அணித் தலைவர், அதிரடி ஆரம்ப ஆட்டக்காரர் சனத் ஜயசூரியவிற்கு இந்தப் போட்டி ஒரு சவாலாக விளங்கும் என்பதில் எந்தவித ஐயமுமில்லை. இந்த அணி தெரியப்பட்ட முறையில் பலத்த சந்தேகங்கள் நிலவுகின்றன.

வெளிநாட்டு ஆடுகளங்களில் தனது தொடக்க ஆட்டத் திறமை

**தொகுப்பு:**
**பஞ்சநாதன் சுதர்சன்**

மூலம் எதிரணிப் பந்து வீச்சாளர்களை குழப்பியடித்த றொமேஸ் களுவிதாரண 30 பேர் கொண்ட அணியிலே தெரியப்படாதது வேதனைக்குரியது.

அதேபோல் - சிறந்த சகலதுறை ஆட்டக்காரரும், 1996 உலகக்கிண்ண போட்டிகளின்போது சிறப்பாக ஆடியவருமாகிய உப்புல் சந்தனவுடைய நீக்கம் ஆச்சரியத்திற்குரியது.

அதேபோல் சில அனுபவமற்ற இளைய ஆட்டக்காரர்கள் அணியில் தெரியப்பட்டது இலங்கை அணியை தோல்விப் பாதைக்கு கொண்டு செல்லவா? என்று ஏங்கவைக்கிறது. இரண்டு தேக்குமரத் தூண்களாகிய அரவிந்த டீ சில்வா, ஹசான் திலகரட்ண ஆகிய மூத்த பழுத்த ஆட்டக்காரர்கள் அணியிலிருப்பது அணிக்கு ஏற்றப்பட்ட குளுக்கோஸ்.

இலங்கையணியின் பயிற்றுநர் டேவ் வாட்மோருடைய ஒப்பந்தம் வெகுவிரைவில் முடிவடைய இருக்கின்றது. அவர் தனது இறுதிக் காலத்தை பொறுப்பற்றவிதமாக இலங்கை அணியுடன் கழிக்கின்றார் என்றே தெரிகின்றது.


இலங்கை அணி பெரும்பாலும் வேகப்பந்து வீச்சாளர்களையே நம்பியிருக்கிறது. எல்லோரும் முரளிதரனுடைய பந்து வீச்சு இந்த மைதானத்தில் அவ்வளவாக எடுபடாது என்றே நினைக்கிறார்கள் ஆனால், அவருடைய குறும் வேக சுழல் பந்து வீச்சு விக்கெட்டுக்களை அள்ளும்.

அடுத்ததாக நியூசிலாந்து அணியை எடுத்துகொள்வோம். இந்த அணியின் தலைவர் ஸ்ரீபன் பிளெமிங் ஒரு சிறந்த அணித் தலைவராக இருக்கிறார். தொடர் வெற்றிகளை குவித்து மிகவும் உத்வேகத்துடன் இந்த அணி களம் இறங்குகிறது.

உலகின் அதிகூடிய வேகப்பந்து வீச்சாளர்கள் வரிசையிலே இடம்பிடித்திருக்கின்ற ஷேன் பொண்ட்டுடைய பந்து வீச்சை இலங்கை அணியின் அத்தப்பத்து போன்ற வீரர்கள் எவ்வாறு இன்று முகம் கொடுக்கப் போகின்றார்கள்.

டரில் டஃபி, ஜேக்கப் ஓரம் போன்ற பந்து வீச்சாளர்களுக்கு இன்று பலத்த வேட்டை இருக்கிறது. அணியின் மூத்த ஆட்டக்காரர்கள் வரிசையிலே கிறிஸ் கெயின்ஸ், நாதன் ஆஸ்டல், கிறிஸ் ஹரிஸ், கிரெய்க் மக்மிலன் ஆகியோருடைய துடுப்பாட்டம் விசேட மேளக்கச்சேரிதான்.

இந்த அணித் தெரிவிலே காணப்படக்கூடிய ஒரு குறைபாடு என்னவென்றால் அனுபவமிக்க பந்து வீச்சாளராகிய ஷான் ஒக்கோணர் நீக்கப்பட்டது. இந்தியாவை அண்மையில்



நாதன் ஆஸ்ரல்

Test மற்றும் ஒருநாள் போட்டிகளில் கதிகலங்கவைத்து வெற்றிவாகை சூடி அதே போர்க்கோலத்துடன் இந்த அணி மற்றொரு ஆசிய நாட்டு அணியாகிய இலங்கை அணியுடன் மோதுவதற்கு இன்று களம் இறங்குகின்றது.

பெரும்பாலும் இந்த ஆடுகளம் இரண்டு அணிகளுக்கும் பொருத்தமானதாகவே இருக்கும். ஏனெனில், இந்த இரண்டு அணிகளும் சமபலத்துடன் களம் இறங்குகின்றன. இன்று இதே நாள் G.M.T. நேரப்படி காலை 7.30 மணிக்கு ஹராரே விளையாட்டு மைதானத்தில் சிம்பாப்வே எதிர் நமீபியா அணிகளுக்கிடையிலான போட்டி நடைபெற இருக்கிறது. ஆனால், ரசிகப் பெருமக்கள் இலங்கை எதிர் நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான போட்டியைக் கண்டு களிப்பதற்காக அதிகம் குவிவார்கள் என்பதில் எந்தவிதமான ஐயமுமில்லை. இன்று வெல்வது சிங்கமா? இலையா?

# கடந்த வருடம் மந்திகையில் 1,181 குழந்தைகள் பிறப்பு!

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் கடந்த வருடம் 1181 குழந்தைகள் பிறந்துள்ளதாக வைத்தியசாலைப் புள்ளிவிபரங்களில் இருந்து தெரியவருகின்றது.

இதேவேளை, இவ் வைத்தியசாலையில் கடந்த வருடம் 13 ஆயிரத்து 124 நோயாளர்கள் விடுதிகளில் தங்கிச் சிகிச்சை பெற்றுள்ளனர். இவ்வாறு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நோயாளர்களில் 45 பேர் மரணமாகியுள்ளனர் எனவும் அந்தப் புள்ளிவிபரங்களில் இருந்து தெரிய வருகின்றது.

# காங்கிரஸ் இல்லத்தில் ஜீ.ஜீ. நினைவுநாள்

(யாழ்ப்பாணம்)

அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் 26 ஆவது சிரார்த்த தினம் நேற்று காங்கிரஸ் இல்லத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

நேற்றுக் காலை 10 மணியளவில் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வின் ஆரம்பத்தில், குருநகரிலுள்ள அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் சிலைக்கு மலர்மாலை அணிவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

பின்னர் காங்கிரஸ் இல்லத்தில் சிரார்த்த தின நிகழ்வுகள் இடம்பெற்றன. இதன்போது, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் மகேந்திரராசா மற்றும் ஆனந்தராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் ஆகியோர் அஞ்சலி உரை நிகழ்த்தினர்.

# மஹரகம அமைப்பாளராக நிஹால் கருணாரட்ன நியமனம்!

## ஜனாதிபதி சந்திரிகா தீர்மானம்

(கொழும்பு)

ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் முன்னாள் கட்டளை அதிகாரி நிஹால் கருணாரட்ன உட்படப் பலரை, சுதந்திரக் கட்சியின அமைப்பாளர்களாக ஜனாதிபதி சந்திரிகா நியமிக்கவுள்ளதாகத் தெரியவருகின்றது. தேர்தலை நடத்துவதற்காக கட்சியைப் பலப்படுத்துவதற்காகவே இந்த நியமனங்களை வழங்க ஜனாதிபதி சந்திரிகா முடிவு செய்திருக்கின்றார்.

மஹரகம தொகுதி அமைப்பாளராகவே நிஹால் கருணாரட்ன நியமிக்கப்படவுள்ளார் எனத் தெரியவருகின்றது.

# ஈராக் மீதான யுத்தம் ஆரம்பிக்குமானால் இலங்கையில் எரிபொருள் பற்றாக்குறை

## ஏற்படும் என்கிறார் அமைச்சர் கரு ஜெயசூரிய

ஈராக் மீதான யுத்தம் ஆரம்பிக்கப்பட்டால், நாட்டில் எரிபொருளுக்குப் பலத்த தட்டுப்பாடு ஏற்படும் என்று மின்சக்தி, எரிபொருட்துறை அமைச்சர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

இந்த எரிபொருள் தட்டுப்பாட்டை எதிர்கொள்வதற்கு ஏற்ற வகையில், எரிபொருளைச் சேமித்து வைப்பதற்கான நடவடிக்கையில் அரசாங்கம் இறங்கியிருப்பதாகவும் -

இதற்காகத் திருகோணமலைத் துறைமுகத்திலுள்ள எரிபொருள் குதங்களை குத்தகைக்கு எடுத்த இந்திய எண்ணெய் கூட்டுத்தாபனத்திடம் எரிபொருளைச் சேமிப்பதற்கான உதவி கோரப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# நெடுந்தீவுக் கடலில் காவியமான கடற்புலிகளுக்கு வீரவணக்கம்



கடற்புலி மேஜர்
ஆற்றலோன்/சுதன்



கடற்புலி கப்டன்
பொதிகைத்தேவன்



கடற்புலி கப்டன்
அன்பன்/ஊர்வண்ணன்

07.02.2003 அன்று நெடுந்தீவுக் கடற்பரப்பில் வீரச்சாவடைந்த கடற்புலிகளுக்கு வீரவணக்கத்தையும் அஞ்சலியையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

யாழ்.வணிகர் கழகமும், வர்த்தகர்களும்.

யாழ்ப்பாணம். (சி-577)

# கடலில் காவியமான கடற்புலிகளுக்கு வீரவணக்கம்



கடற்புலி மேஜர்
ஆற்றலோன்/சுதன்



கடற்புலி கப்டன்
பொதிகைத்தேவன்



கடற்புலி கப்டன்
அன்பன்/ஊர்வண்ணன்

07.02.2003 அன்று நெடுந்தீவுக் கடலில் தம்மையே அழித்து வீரகாவியமான கடற்புலிகள் மூவருக்கும் எமது அஞ்சலிகள்.


அரியாலை பனை தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம். (சி-575)

தலைவர், பணிப்பாளர் சபை மற்றும் ஊழியர்கள்.

### யாழ்.குடாநாட்டு நிலவர அறிக்கை

# புஷ்ஷின் தூதுவர் அடுத்தவாரம் கொலின் பவலுக்கு சமர்ப்பிப்பார்

யாழ்.குடாநாட்டுக்கு அண்மையில் விஜயம்செய்த அமெரிக்க அதிகாரியான டேவிட் குட், யாழ். குடா



டேவிட் குட்

நாட்டு நிலவரம் தொடர்பான மதிப்பீட்டு அறிக்கையை அடுத்தவாரம் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கவுள்ளார்.

குடாநாட்டில் தற்போதைய சமாதானச் சூழலில் மக்களின் வாழ்வு நிலையில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்கள் தொடர்பாகவும்,


பொதுமக்களுக்கு எதிர்காலத்தில் வழங்கவேண்டிய மனிதாபிமான உதவிகள் பற்றிய நடைமுறைக்குச் சாத்தியமான செயற்திட்டங்கள் தொடர்பாகவும் ஆராய்ந்து விரிவான அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தினூடாக அமெரிக்க ராஜாங்கச் செயலாளர் கொலின பவலின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவுள்ளது.

கடந்த ஒருவருடமாக யாழ்குடாநாட்டில் ஏற்பட்டு வருகின்ற சிவில் மற்றும் பாதுகாப்புத் தொடர்பான மாற்றங்கள் குறித்து, அமெரிக்க அரசு மிகவும் உன்னிப்பாகக் கவனித்து வருகின்றது என்றும்,

அடுத்தவாரம் டேவிட் குட்டினால் சமர்ப்பிக்கப்படவிருக்கின்ற குடாநாட்டு நிலவரம் தொடர்பான அறிக்கை, மேற்படி இரு அம்சங்களின் அடிப்படையிலானதாகவே அமையுமென்றும் தெரிய வருகிறது.

குடாநாட்டின் ஆகப்பிந்திய நிலவரத்தை இந்தஅறிக்கை விலாவாரியாக அமெரிக்க அரசுக்குத் தெரியப்படுத்துமெனவும் மேலும் தெரியவருகின்றது.

மேற்படி அறிக்கையின் அடிப்படையிலேயே அமெரிக்க அரசின் இராஜாங்கத் திணைக்களம் யாழ்.



கொலின் பவல்

குடாநாடு தொடர்பான எந்தவொரு முடிவையும் மேற்கொள்ளும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது (க)

# பிரமுக வங்கித் தலைவருக்கு உயர் நீதிமன்றம் அழைப்பாணை

(கொழும்பு)

பிரமுக வங்கியின் தலைவர் ரொகான் பெரேராவையும் மேலும் நான்கு பேரையும் வெளிநாட்டு நாணயமாற்றுக் கட்டுப்பாட்டுச் சட்டங்களை மீறிய குற்றச்சாட்டுத் தொடர்பாக நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

சட்டமா அதிபர் தாக்கல் செய்திருந்த குற்றப்பத்திரங்களை ஆராய்ந்த கொழும்பு மேல் நீதிமன்றம் இந்த அழைப்பாணையைப் பிறப்பித்துள்ளது.

இந்த ஐந்து சந்தேகநபர்களும் மே மாதம் 5 ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு பணிக்கப்பட்டுள்ளனர்.

செலான் வங்கியின் கணக்கு ஒன்றிலிருந்து 5 லட்சம் டொலரை மாற்றியது உட்பட இந்தச் சந்தேகநபர்கள் மீது 217 குற்றச்சாட்டுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

# அமெரிக்கத் தூதுவராக லன்ஸ்ரீட் ஜனாதிபதி புஷ்ஷினால் நியமனம்

இலங்கை மற்றும் மாலைதீவு நாடுகளுக்கான புதிய அமெரிக்கத் தூதுவராக ஜெப்ரி லன்ஸ்ரீட் நியமிக்கப்பட்டிருக்கிறார். இதற்கான அறிவிப்பை அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் வெளியிட்டிருக்கிறார்.

இவர், அமெரிக்கச் சுற்றுச்சூழல் பாதுகாப்புத் திணைக்களப் பணிப்பாளராகப் பணியாற்றியவர். பின்னர் தெற்காசிய விவகார ஆப்கானிஸ்தானுக்கான இணைப்பாளராகவும் பணிபுரிந்துள்ளார்.

பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் அமெரிக்க நடவடிக்கைகளுக்காக இணைப்பாளராகவும் இருந்துள்ளார்.

இவரது நியமனத்தை அமெரிக்க செனட் சபை அங்கீகரித்ததும் இவரது நியமனம் நடைமுறைக்கு வரும்.

# பேச்சுக்களில் பௌத்தர்கள் சார்பில் எவரும் இல்லையாம்!

### மல்வத்த அனுநாயக்க தேரர் கவலை

(கொழும்பு)

சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம்களுக்காகவும், தமிழ் மக்களுக்காகவும் பல பிரதிநிதிகள் கலந்து கொள்கிறார்கள். ஆனால், பௌத்தர்கள் பற்றிப் பேசவோ, அவர்களின் உரிமைகள் குறித்துப் பேசவோ ஒரு பிரதிநிதிகூட பேச்சுக்களில் இடம் பெறவில்லை எனத் தெரிவித்திருக்கிறார் கண்டி மல்வத்த பீடத்தின் அனுநாயக்கரான அளுத்கம தம்மானந்த தேரர்.

அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தன, மல்வத்த அனுநாயக்கரைச் சந்தித்தபோதே அவர் இக்கருத்தை வெளியிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்-

சமாதானப் பேச்சுக்கள் தாய்லாந்து, நோர்வே, ஜேர்மனி என்று இடத்துக்கிடம் மாறி மாறி நடக்கின்றன. இதில் முஸ்லிம்கள் சார்பிலும், தமிழர்கள் சார்பிலும் பல பிரதிநிதிகள் கலந்துகொள்கின்றனர். ஆனால், பௌத்தர்கள் பற்றி, பிக்குகள் பற்றி, அவர்களின் உரிமைகள் பற்றிப் பேச எந்தவொரு பிரதிநிதியும் இல்லாதது கவலைக்குரியது.

சமாதானப் பேச்சுக்களில் பௌத்தர்கள் சார்பில் பேசுவதற்குப் பௌத்தர் ஒருவர் பிரதிநிதித்துவம் வகிக்கவேண்டும்.

யுத்தநிறுத்தத்தின் பின்னர் புலிகளுக்கு அதிக வளங்களும், வசதிகளும் வழங்கப்பட்டிருப்பதாகப் பொது மக்கள் கருதுகின்றனர். இது மக்கள் மத்தியில் சந்தேகங்களை ஏற்படுத்துகின்றது.

நிரந்தர சமாதானமே அனைவரினதும் வேண்டுதலாகும். பேச்சுக்கள் அசாத்தியமானதாகிவிட்டால் அரசாங்கம், ஜனாதிபதி, பிரதமருக்கு மட்டுமன்றி அனைவருக்குமே தோல்வியாகிவிடும் என மல்வத்த அனுநாயக்கர் மேலும் தெரிவித்தார்.

# யாழ்ப்பாணத்தில் இருந்தபடியே வைத்தியர்களைப் பதிவு செய்யலாம்

### இணையம் மூலம் வசதி

பல்வேறு வைத்தியசாலைகளிலும் உள்ள 500 இற்கும் மேற்பட்ட வைத்தியர்களுடன் யாழ்ப்பாணத்திலிருந்தபடியே இணையத்தளம் மூலம் தொடர்புகொண்டு பதிவு செய்யும் 'ஈ - சனலிங்' வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்திலுள்ள 'சிற்றி மெடிக்கல்' மருந்தகத்தில் இரண்டே நிமிடங்களில் தொலைபேசி மூலம் இப்பதிவுகளைச் செய்வதற்கு வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டிலுள்ள மக்கள், கொழும்பு மற்றும் பிற பகுதிகளிலுள்ள வைத்தியர்களிடம் பதிவு செய்துகொள்வதற்குப் பலத்த சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

ஈ - சனலிங் வசதி மூலம் இந்த நெருக்கடிகளுக்குத் தீர்வு காணப்பட்டிருப்பதாக இந்நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

# வடக்கு -கிழக்கைப் பிரிக்க வேண்டும்; பத்து லட்சம் கையெழுத்து வேட்டை!

வடக்கையும் - கிழக்கையும் பிரித்து, தனித் தனியான மாகாணங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்று கோரி - பத்து இலட்சம் கையெழுத்துக்கள் பெறும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எல்.ஏ.குணவர்தன என்பவரின் தலைமையிலான கிழக்கு மாகாண சிங்கள மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் சங்கம் மேற்படி கையெழுத்துப் பெறும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது.

ஏற்கனவே மேற்படி அமைப்பு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடமும் வடக்கையும் - கிழக்கையும் தனித்தனியாகப் பிரிக்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது. (01)

### வைத்தியர் இடமாற்றம்

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் நீண்ட காலமாகக் கடமையாற்றிய பதிவு வைத்திய அதிகாரி சிவராஜா, நிலாவெளி அரசினர் வைத்தியசாலைக்கு இம்மாதம் முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (116)

# ஒன்பது லட்சம் சிறார்கள் வட-கிழக்கில் பாதிப்பு

### யுனிசெப் செயலாளர் தகவல்

(பேர்ளின்)

வட-கிழக்கிலுள்ள ஒன்பது இலட்சம் சிறார்கள் பல்வேறு பிரச் சினைகளால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருப்பதாக யுனிசெப் தெரிவித்துள்ளது.

ஊட்டமின்மை, சுகாதார வசதிக் குறைவு, கல்வி வசதிகளின்மை, தொடர்ச்சியான இடப்பெயர்வு, பெற்றோரையும் குடும்பங்களையும் இழத்தல், கண்ணிவெடிகள் போன்ற பல்வேறு காரணிகளால் இவர்கள் பாதிக்கப்பட்டிருப்பதாக யுனிசெப் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை - சிறார்கள் பாதிப்புப் பற்றியும், யுனிசெப்புடன் இணைந்து விடுதலைப் புலிகள் செயற்றிட்டமொன்றை நடைமுறைப்படுத்துவது பற்றியும் எட்டப்பட்ட உடன்பாடு தொடர்பாகவும் பேர்ளினில் நடைபெற்ற பேச்சுக்களில் அரசாங்கத்தரப்புடன் புலிகள் கலந்துரையாடியுள்ளனர்.

### அரச கூட்டுத்தாபன, நிறுவன உயரதிகாரிகளின்

# சம்பள உயர்வு சுற்றுநிருபம் அமைச்சரவை நிராகரிப்பு!

(கொழும்பு)

அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரச நிறுவனங்களின் உயர் மட்ட அதிகாரிகளுக்குச் சம்பள உயர்வு வழங்குவது சம்பந்தமாக திறைசேரியினால் விடுக்கப்பட்ட சுற்றுநிருபத்தை நிராகரிப்பதென அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

பிரதமர், நிதியமைச்சர், பிரதி நிதியமைச்சர் ஆகியோருக்குத் தெரியப்படுததப்படாமல் இச்சுற்றுநிருபம் விநியோகிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சுற்றுநிருபத்தின்படி கூட்டுத்தாபனத் தலைவரின் சம்பளம், 25 ஆயிரத்தில் இருந்து 40 ஆயிரம் வரையும், 'பி' தரத்திலுள்ள கூட்டுத்தாபனத் தலைவரின் சம்பளம் 24 ஆயிரத்தில் இருந்து 35 ஆயிரம் வரையும்,'சி' பிரிவுக் கூட்டுத்தாபனத் தலைவரின் சம்பளம் 21 ஆயிரத்தில் இருந்து 30 ஆயிரம் வரையும் அதிகரிக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. இந்தச் சம்பள உயர்வை ஜனவரி முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்து மாறு சுற்றுநிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதம் மந்திரி, நிதியமைச்சர் பிரதி நிதியமைச்சர் ஆகியோருக்குத் தெரியாது திறைசேரியினால் விடுக்கப்பட்டிருக்கும் இச்சுற்றறிக்கையை ரத்துச் செயவதென அமைச்சரவையால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### துர்க்காதேவி தேவஸ்தானத்தில் மாசிமக பூசைகள்

(மல்லாகம்)

தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் மாசிமகப் பூசைகள் நடைபெற்று வருகின்றன.

எதிர்வரும் 17 ஆம் திகதி மாசிமகப் பெருவிழா நடைபெறும். (68)

# அரசின் நடவடிக்கைகளே அதனைக் கவிழ்த்துவிடும்!

### என்கிறார் சரத் அமுனுகம எம்.பி.

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் ஜே.வி.பி.க்கும் இடையிலான கூட்டணியை அமைப்பது தொடர்பான அடுத்த சுற்றுப் பேச்சுக்கள் எதிர் வரும் 14 ஆம் திகதி நடைபெறும் எனப் பொதுஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

இவ்விரு கட்சிகளுக்குமிடையிலான திருமணத்துக்குப் பொருத்தம் பார்க்கிறோம். இது தொடர்பாக கடந்த 6 ஆம் திகதி நடந்த முதற்கட்டப் பேச்சுக்கள் திருப்திகரமாக அமைந்தது. இன்னொரு சுற்றுப் பேச்சுக்கள் 14 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

அரசாங்கத்துக்கு எதிராகப் பலமான எதிரணி ஒன்றை அமைப்பதே இப்பேச்சுக்களின் நோக்கமாகும். இந்த எதிரணி மூலம் நாடாளுமன்றத்திற்குள்ளும் வெளியிலும் அரசின் குறைகளை விமர்சிப்போம்.

அரசாங்கத்தை நாம் கலைக்க வேண்டியதில்லை. அரசாங்கத்தின் நடவடிக்கைகளே அதனைக் கலைத்துவிடும். அதனால் அந்தப் பொறுப்பு எமக்குக் கிடையாது' என்னவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# முழு வசதிகளின்றி நூலகத்தைத் திறப்பது சேதமாக்கிய காடையர் செயலுக்கு ஒப்பானது!

## இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் கண்டனம்

புனரமைப்புப் பணிகள் முழுமையாக முடிவடையாமல் யாழ்.பொது நூலகத்தை மீளப் பாவனைக்காகத் திறப்பதை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது எனச் சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். அவ்வறிக்கையில் .மேலும் குறிப்பிட்டிருப்பதாவது,

தமிழ் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளிலும், ஆசிரியர்களின் வான்மை விருத்தியிலும் அதிக அக்கறைகொண்டு செயலாற்றிவரும் எமது சங்கம்-அவசரமாக நூல் நிலையத்தைத் திறப்பது கல்விச் சமூகத்தைச் சேர்ந்த எவராலும் ஏற்றுக் கொள்ளமுடியாத விடயமாகுமென நினைக்கின்றது.

தென்கிழக்கு ஆசியாவிலேயே சிறந்த நூல்நிலையமாக விளங்கிய இந்த நூல்நிலையத்தை, மீண்டும் அதேநிலை ஏற்பட்ட பின்னர்தான் செயற்பட வைப்பது வரவேற்கத்தக்க விடயமாகும்.

தமிழ் மக்களின் கல்விப் பாரம்பரியத்தை அழிக்கவேண்டும் எனத் திட்டமிட்டு, இந்த நூல்நிலையத்தை சேதமாக்கிய சிங்களக் காடையர்களின் செயலும், எவ்வித வசதிகளுமற்ற நிலையில் நூல்நிலையத்தைத் திறப்பதும் ஒரேவிதமான செயல் என நாம் கருதுகின்றோம்.

கல்வி உட்பட பலவற்றை நாம் இழந்துநிற்கும் இந்தநிலையில் எவ்விடயத்திலும் அரைகுறை நிலையை நாம் ஏற்கக்கூடாது. ஆறப்பொறுத்த நாம், இன்னும் சொற்ப காலத்திற்காகப் பொறுத்திருப்பது ஒரு பெரிய விடயமல்ல.

எனவே யாழ்.மாநகரசபையும், அரசியல்வாதிகளும் நல்லதைச் செய்கின்றோம் என நினைத்து, முழுமையற்ற இவ்விடயத்தைப் புகழுக்காகச் செய்யாமல் சேவை நோக்கம் கருதிச் செய்வார்கள் என எதிர்பார்க்கின்றோம் - என அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

### இல்ல மெய்வல்லுநர் போட்டி

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை மறுநாள் புதன்கிழமை பி.ப 2.30மணிக்கு நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் மேலதிகக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மகாலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (17)

### இலவச ஆங்கில வகுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மறைமாவட்ட இளையோர் ஆணைக்குழுவினால் உயர்தர வகுப்பு மற்றும் மேல் படிப்பைத் தொடரும் மாணவர்களுக்கான இலவச ஆங்கில வகுப்புக்கள் சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் நடைபெறுகின்றன. இவ்வகுப்புக்கள் நேற்று முதல் குருசோ வீதியில் அமைந்துள்ள அருள்கதிர் நிலையத்தில் இடம்பெற்று வருகின்றன.

### இரு மாணவர்களுக்கு சைக்கிள்கள் அன்பளிப்பு

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் கடமைபுரியும் பிரான்ஸ் மருத்துவ நிபுணர்கள் - யுதத்தினால் பெற்றோர்களை இழந்த இரு மாணவர்களுக்குச் சைக்கிள்களை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

உடுத்துறை மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த ஒரு மாணவனுக்கும், மாணவி ஒருவருக்குமே சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன. (13)

### இளவாலையில் திருச்சொரூபங்கள் திருட்டு

(இளவாலை)

இளவாலை புனித பிலிப்பு நேரியார் ஆலயத்திலிருந்து திருச்சொரூபங்கள் கடந்த செவ்வாயன்று திருடப்பட்டுள்ளன.

இரவுவேளையில் ஆலயத்தினுள் நுழைந்த திருடர் கோஷ்டி, அங்கிருந்த பிலிப்பு நேரியார் சொரூபம், அந்தோனியார் சொரூபம் உட்பட ஐந்து திருச்சொரூபங்களைத் திருடிச் சென்றுள்ளது. (41)

# மிகவும் மோசமான நிலையில் கோண்டாவில் - இருபாலை வீதி

கோண்டாவில்-இருபாலை பிரதான வீதி குன்றும்- குழியுமாக காணபபடுவதனால், இவ்வீதியால் போக்குவரத்துச் செய்யும் பயணிகள் பெருஞ்சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக, கலாசாலை மாணவர்கள், கல்வியல் கல்லூரி மாணவர்கள் இவ்வீதியால் போக்குவரத்துச் செய்யும்போது பெருஞ்சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். மேற்படி வீதி சேதமடைந்துள்ளமையால்- மோட்டார் வாகனங்கள் விபத்துக்குள்ளாகும் அபாயம் உள்ளதாகச் சாரதிகள் அச்சம் தெரிவிக்கின்றனர். (96)

# அரசின் நிலைப்பாட்டை விளக்குவதற்கு நாடு முழுவதும் பத்தாயிரம் கூட்டங்கள்

ஆறு மாத காலத்துக்குள் நாடு பூராவும் பத்தாயிரம் கொள்கை விளக்கக் கூட்டங்கள் நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அரசாங்கம் நாட்டின் அபிவிருத்தி தொடர்பாக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் பற்றியும் சமாதானப் பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றங்கள் பற்றியும் இந்தக் கூட்டங்கள் மூலம் மக்களுக்கு விளக்கமளிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

மாகாண மட்டத்தில் இடம்பெறும் கூட்டங்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலும், ஏனைய கூட்டங்களை நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதேச அமைப்பாளர்கள் மட்டத்தில் இடம்பெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# நீரிழிவு நோய் DIABETES

பகுதி 15

- ச.ஆ.கோபாலமூர்த்தி.

### இன்சுலின் ஏற்றும் நோயாளிகள் கவனிக்க வேண்டியவை

15) இன்சுலினை அதிகுளிரூட்டி (DEEP FREEZER) இல் சேமிக்கக் கூடாது. குளிரூட்டியின் கதவுச் சட்டத்திலேயே சேமிக்கவேண்டும். இன்சுலின் தவறான வெப்பநிலையில் சேமிக்கப்பட்டால் கெட்டுவிடும் என்பதை அறிந்திருக்கவேண்டும்.

16) மூக்குத் துவாரத்தினுள் விரல்விட்டுக் குடைதல், மூக்கு மயிர் பிடுங்குதல், மூக்குத்தூள் உபயோகம், (தடிமன் ஏற்படும் வேளையில்) மூக்கினுள் குருதைலம் பூசுதல் போன்றவை மூக்கினுள் புண்களை ஏற்படுத்தலாம். எனவே இவற்றைத் தவிர்க்கவேண்டும்.

17) சலவைத்தூள், சலவைத் திரவம், குளோரீன் திரவம், ஹாப்பிக், சுண்ணாம்பு, சிகைக்காய்த்துகள்கள் போன்றவை கண்களுடன் தொடுகை ஏற்படின் கண்களில் புண் ஏற்பட்டு, அதன் விளைவாகக் கண்கள் குருடாகலாம். எனவே இத்தகைய பொருட்கள் கண்களில் தெளிக்கப்பட்டால் கண்களை நன்கு கழுவிவிடவேண்டும்.

18) அதிக குருதி அமுக்கம் தொகுதிக் குருதிச் சுற்றோட்டத்திலும் ஏற்படலாம். நுரையீரல் குருதிச் சுற்றோட்டத்திலும் ஏற்படலாம். சில சந்தர்ப்பங்களில், வைத்தியர் இவற்றை வேறுபடுத்திக் கூறி, அவற்றைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு ஆலோசனைகளைக் கூறலாம். இந்த ஆலோசனைகளைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கவேண்டும்.

### நீரிழிவு நோயாளிகளுக்கு ஏற்ற உணவு

நீரிழிவு நோயாளிகளுக்கு ஏற்ற உணவு மேலோட்டமாக இங்கே தரப்படுகிறது. நோயாளியின் தொழில் (உடல் உழைப்பின் அளவு), அவரைப் பீடித்துள்ள இதரநோய்கள் என்பனவற்றைச் சீர்தூக்கிப் பார்த்து அவரவருக்குப் பொருத்தமான உண்டிப் பட்டியலை வைத்தியர் சிபார்சு செய்வார். அதற்கு அமையவே உணவைத் தேர்ந்தெடுக்கலாம். கீழே தரப்பட்டுள்ள உண்டிப் பட்டியல் பல்வேறு மாற்று உணவு வகைகளை உள்ளடக்கியுள்ளது. இவற்றுள் விருப்பிற்குரிய உணவுகளைத் தேர்ந்தெடுக்கலாம். உணவின் அடிப்படை அளவுகளை மாற்றாமலே இந்தத் தேர்வு மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதைக் கவனத்திற்கொள்ள வேண்டும். விருப்பமான மரக்கறிகளை, இலகுவாகத் தெரிவு செய்யத்தக்க வகையில் சில டாக்டர்கள் சிபார்சு செய்யும் முறை ஒன்று இங்கு தரப்படுகிறது.

தொகுதி 1 இல் குறிப்பிடப்பட்டுள்ளவை விரும்பிய அளவு உண்ணத்தக்கது. இங்கு ஒரு கோப்பை எனக் குறிப்பிடப்படுவது 200 மி.லீ. கொள்ளளவுடைய கோப்பையைக் குறிப்பிடுகிறது. சிலர், ஒரு கப என்றதும் 1 லீற்றர் கோப்பை அளவு உணவை உண்டு நோயை மிகுவிக்கின்றனர். எனவே, கோப்பையின் கொள்ளளவு விடயத்தில் தெளிவான அறிவுபெற்றிருப்பது அவசியமாகும். அத்துடன், தீட்டாத தானியங்கள், இலைவகைகள், அவரைவகை, மரக்கறிகள், பழவகை, சுண்டைக்காய் என்பவற்றில் போதிய நார்ப்பொருள் உண்டு என்பதையும், உதவாதது எனக் கழிக்கப்படுகின்ற முற்றிய வெண்டைக்காய், பனி அவரைக்காய், வாள் அவரைக்காய் என்பனவற்றில் அதிக நார்ப்பொருள் இருப்பதால் அவற்றை எறிந்துவிடாது சமைத்தும், வறுத்தும் சுவைத்துச் சாப்பிடும் பழக்கத்தை ஏற்படுத்தினால் மலச்சிக்கல் உபாதை ஏற்படாது என்பதையும் அறிந்திருத்தல் நன்று.

தொகுதி 2 இல் அடங்கியுள்ளவற்றுள், குறைந்தது 1/2 கோப்பை வரை உண்ணத்தக்கது.

**மரக்கறித் தொகுதி 1**

கோவா, பப்பாசிக்காய், வெந்தயம், சுண்டைக்காய், பாகற்காய், தக்காளி, போஞ்சி, சோயாஅவரைக்காய், புடோலங்காய், வாழைப்பூ, கறிமிளகாய், வெண்டைக்காய், கீரை, உண்ணத்தக்க இலைகள், நீற்றுப் பூசணிக்காய், கெக்கரிக்காய்.

(தொடரும்)

# ஞாயிறு தினங்களில் ஏ-9 வீதியைத் திறக்க பளை செஞ்சிலுவைக் கிளை கோரிக்கை

(பளை)

பளைப் பிரதேச இலங்கை செஞ்சிலுவைச் சங்கக்கிளை அங்குரார்ப்பணவிழா அண்மையில் நிகழ்ந்தது. இந்த அங்குரார்ப்பண விழாவில் பளைப் பிரதேச மக்கள் வைத்தியசேவை பெறுவதல் இருக்கும் சிரமங்களைத் தவிர்ப்பதற்காக ஞாயிற்றுக்கிழமைகளிலும் A-9 வீதி திறக்கப்படவேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

மேலும், காலையில் 7 மணிக்குத் திறக்கப்படும் பாதை - 6 மணிக்குத் திறக்கப்பட வேண்டுமெனவும், மாலையில் 5.30 மணிக்கு மூடப்படும் பாதை - 6.30 மணிக்கு மூடப்பட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும், இதனால் பளைப் பிரதேசத்தில் பணி யாற்றும் ஊழியர்கள் தமது கடமை நேரத்தை அதிகரிக்க முடியும் எனவும் செஞ்சிலுவைச்சங்கப் பளைக் கிளையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஞாயிற்றுக்கிழமைகளில் இப்பிரதேசத்தில் அவசர வைத்திய சேவைகளைப்பெற நீண்டதூரம் அலையவேண்டியிருப்பது குறிப்பிடத்தக்கது.

# யாழ்.நகரப் பகுதிகளில் வேகமாகப் பரவும் பாதீனியம்

யாழ்.நகரை அண்டிய பகுதிகளில் நச்சுத் தன்மைகொண்ட தாவரமான பாதீனியம் வேகமாகப் பரவி வருகின்றது.

யாழ். நூல்நிலையம், துரையப்பா விளையாட்டரங்கு, ஆரியகுளம், ஆஸ்பத்திரி வீதி போன்ற பலவேறு பகுதிகளில் பாதீனியம் பரவி வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

வேகமாகப் பரவிவரும் பாதீனியத்தினைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

இதேவேளை, விவசாயத் திணைக்கள அதிகாரிகள் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பாதீனியம் அழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகினறமை குறிப்பிடத்தக்கது. (60)



சமாதானச் செயன்முறையில் பெண்களை ஒன்றிணைத்தல் என்ற குழு ஆய்வில் தலைமை உரையினை சிறான் பணிப்பாளர் செல்வின் இரேனியஸ் உரையாற்றுவதை முதலாவது படத்திலும், கொழும்புப் பல்கலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளர் வி.ரி. தமிழ்மாறன் உரையாற்றுவதை இரண்டாவது படத்திலும், குழு ஆய்வில் பங்கேற்ற கருத்தாளர்களை மூன்றாவது படத்திலும் காணலாம்.

### 'வழிபாடு' நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

அமரர் பண்டிதர் ப.கணபதிப்பிள்ளையின் சிந்தனையில் உதித்த "வழிபாடு" நூல் வெளியீட்டுவிழா நாளை மறுநாள் 12 ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 4 மணிக்குக் கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

ஓய்வுபெற்ற அதிபர் க.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் நூல் வெளியீட்டுரையைக் கலாநிதி க.சொக்கலிங்கமும், ஆய்வுரையை இந்து சமய விவகார உதவிப் பணிப்பாளர் நா.சிவமகாலிங்கமும் நிகழ்த்துவாாகள். (ச)

### பளைப் பகுதியில் 5 கிராம அலுவலர்களுக்கு தரம் உயர்வு

பளைப் பிரதேசசெயலர் பிரிவில் கடமையாற்றிய ஐந்து கிராம அலுவலர்கள் - கிராம அலுவலர் வகுப்பு ஒன்றிற்குப் தரம் உயர்வு பெற்றுள்ளனா.


இவர்களுக்கான தரமுயர்வுக் கடிதங்களைஉள்நாட்டு அலுவல்கள் அமைச்சு அனுப்பி வைத்துள்ளது.

பளைப் பிரதேசசெயலகத்தைச் சேர்ந்த இ.பாலசுந்தரம், வ.புவனராசா, க.கண்ணப்பமூர்த்தி, சி.கனகரத்தினம், வ.வேதநாயகம் ஆகிய ஐந்து பேருமே தரம் உயர்வு பெற்றுள்ளனர். (34)

# காலம் இலக்கிய சஞ்சிகை (17)

**மலையக எழுத்தாளர்: கே.கணேஷ் சிறப்பிதழாக இவ் விதழ் வெளிவந்திருக்கிறது**

1970 - 1972 காலப்பகுதியில் கொழும்பில் இருந்து 'தமிழமுது' என்ற இலக்கிய காலாண்டுச் சஞ்சிகை வெளிவந்தது. அந்தச் சஞ்சிகை மலையகப் படைப்பாளிகளுக்கு முக்கிய களம் அமைத்துக் கொடுத்தது. இன்றைய மலையக முன்னணிப் படைப்பாளிகளான தெளிவத்தை ஜோசப், என்.எஸ்.எம். இராமையா, மலரன்பன், மாத்தளை வடிவேலன், பன்னீர்ச்செல்வம் ஆகியோரின் படைப்புக்கள் வெளிவந்தன. அவர்களைப்போன்று மலையக மூத்த எழுத்தாளரும் முற்போக்கு வாதியுமான கே.கணேஷ் மொழிபெயர்த்த வியட்நாமியத் தலைவர் ஹோசிமின் எழுதிய கவிதை ஒன்றும் வெளிவந்தது. ஒரு புரட்சித்தலைவனின் உள்ளத்தில் எழுந்த உணர்வை மிகவும் தத்ரூபமாக மொழி பெயர்த்திருந்தார். அந்த மொழிபெயர்ப்புக் கவிதையின் தரம் பலராலும் பாராட்டப்பட்டது.



மொழிபெயர்ப்புத் துறையிலும், ஆக்க இலக்கியத்துறையிலும் ஆழமாக வேர்விட்டிருந்த கே.கணேஷ் அவர்களைக் கௌரவிக்கும் முகமாக கனடாவின் இலக்கியத் தோட்டத்தினர் 'இயல் விருது'

## நூல் அகம்

வழங்கி விழாவெடுத்துக் கௌரவித்துள்ளார்கள்.

இந்த நேரத்தில் கனடாவில் இருந்து வெளிவரும் "காலம்" சஞ்சிகை அவரது புகைப்படத்தை அட்டையில் பெரிதளவில் பிரசுரித்து உள்ளே அவரது நேர்காணல், சிறுகதை, கட்டுரைகளை வெளியிட்டு பெருமைப்படுத்தியுள்ளது.

நேர்காணலை எழுத்தாளர் ஞானசேகரனும், பேராசிரியர் எம்.ஏ.நு:.மானும் கண்டுள்ளார்கள்.

எழுத்தாளர் ஞானசேகரனுக்கு வழங்கிய நேர்காணலில்- இரண்டாவது மகாயுத்த காலத்தில் அகில இலங்கை எழுத்தாளர் சங்கத்தை ஆரம்பித்ததாகவும், அதன் தலைவராக விபுலானந்த அடிகளாரும், உபதலைவராக சிங்கள நவீன இலக்கியத்தின் பிதாமகருமான மார்டின் விக்கிரமசிங்கவும், டாக்டர் சரத்சந்திரவும் தானும் செயலாளர்களாகவும், பி.கந்தையா பொருளாளராகவும் செயற்பட்டு - இலங்கையின் தமிழ், சிங்கள நவீன இலக்கியத்திற்கு பங்களிப்புச் செய்ததையும் குறிப்பிட்டுச் சொலியிருக்கிறார். அத்தோடு தனது 72 வருடகால இலக்கிய அனுபவத்தை அப்பேட்டியில் அழகுற வெளிப்படுத்தி இருக்கிறார்.

பேராசிரியர் நு:.மானின் நேர்காணலில் - மார்க்சியத் தத்துவத்தின் ஊடாக ஒரு ஆன்மீகப் பார்வையை தனது கொள்கையாக ஏற்றுக்கொள்வது போன்று அவர் பதிலளித்திருக்கிறார். "நான் எல்லாவற்றையும் ஊடுருவி என்னுடைய கொள்கையை உருவாக்கிக் கொள்கிறேன்" என்று பதிலளித்திருப்பது மத நம்பிக்கையும் மனிதனுக்கு அத்தியாவசியமானது என்பதைப் பிரதிபலித்துக் காட்டுகிறது.

காலம் சஞ்சிகையில் வெளிவந்த அவரது "சத்திய போதி மரம்" என்னும் சிறுகதை மத நம்பிக்கையின் முக்கியத்துவத்தை எடுத்தியம்புகிறது. அத்தோடு "அதிஷ்டசாலி" என்ற ஹங்கேரியக் கதையும் காலத்தில் வெளியாகியுள்ளது.

காலம் சஞ்சிகையில் கணேஷின் ஆக்கங்களைவிட - கவிஞர் மு.பொன்னம்பலத்தின் நேர்காணலும், தெளிவத்தை ஜோசப்பின் கட்டுரையும், இன்றும் பலரின் ஆக்கங்களில் இடம்பெற்றுள்ளன.

மொத்தத்தில் "காலம்" சஞ்சிகை சிறப்பிதழாக வெளிவந்தது கணேஷுக்குப் பெருமையல்ல, 'காலம்' சஞ்சிகைக்குத்தான் பெருமை.

மணிசேகரன்

# A-9 னை நீளும் நினைவுகள்

பகுதி பதினெட்டு

இந்தவாறு யாழ் உயிர்த்து இசைக்கையில்
இரும்புக்கோட்டையின் எஞ்சிய மீதிகள்
சந்ததிக்கொரு ஞாபகச் சின்னமாய்;
சரித்திரம் அதன் சாட்சியாய்; மாறையில்....
சந்தடி அற்று A~9 வீதியில்
சமர் முனையொன்று அன்று திறந்தது.
அந்தரம் பலபட்ட கிளிநகர்
அடுத்தடுத்துமே காயங்கள் உற்றது.

அன்று கிளிநொச்சிக் காவல் அரண்..... மிக
அதிகமாக இருந்திடவில்லை காண்
சென்றி என்று சிலவும்... சில நூறு
சிங்க வீரரும் அங்கு இருந்தனர்.
புண்ணிருந்து குருதி பெருகவும்,
புயல் அடிப்பதாய்ப் பாய்ச்சல் தொடரவும்,
நின்றெதிர்த்தல் விவேகம் இ(ல்)லை என
நினைத்துத் தாமாக பின்வாங்க எண்ணினர்.

கிளிநகர் முகாம் A~9 வீதியால்
கிளம்பியே ஆனைஇறவிற்குப் போயிற்று.
வழிதெருவிலே சிற்சில வேட்டுகள்
வாய்திறந்தன... ஆயினும் மோட்டார்கள்
முழங்கிப் பேச முயன்றிட வில்லையாம்!
பின்பு, முழுநாளுங் குண்டாற் கணைகளால்
குளிக்க வார்க்கலாம் என்று பொறுத்ததோ?
குருதி கங்கையைக் காணப் பயந்ததோ?



-ஜெயங்கொண்டான்

# பழுத்த ஓலைகள்

சில பேரின் பேச்சில் எப்பொழுதுமே அர்த்தம் தொனிக்கும். காவோலை சலசலக்கும், பலனில்லை என்பார் அவர். தன்னைத் தியாகம் செய்து, எரியாக்கி உலைவைக்கக் கூடவா முடியாது? எனக் கேட்டால், அது சிறிய செயல் என்பார்.


குருத்தோலை சுறுசுறுப்பானது, காற்றுக்குச் சடசடத்தாலும் அது வீரியமானது. பனம் பொருட்கள் அழகிய உருவங்களாகப் புகழ்பெற்றுத் திகழ்வதற்கு இதுதான் காரணமென்பார்.

குருத்தோலைதான் காவோலை ஆகியதென்றால்... பயன்படாமல் காவோலை ஆகிற்று என்பார்.

என்னைப் பொறுத்தவரை பழுத்த ஓலை அவர். காவோலை அல்ல. இரண்டிற்கும் என்ன வித்தியாசம்? குருத்தோலையைப் பதப்படுத்திச் செய்த பயனால் பழுத்தது பழுத்த ஓலை. பயன் படாதது காவோலை.

அவர் ஓர் முன்னைய நாள் ஓய்வு பெற்ற விளையாட்டு ஐ.எஸ்.ஏ அதிகாரியாக இருந்தவர். அவர் மைதானத்தில் நின்றால் எங்குமே சுறுசுறுப்புக் களைகட்டும். அவரின் தேக ஆரோக்கியம், உடற்கட்டு, மனவுறுதி அத்தனையும் அதற்குச் சான்றுபகரும்.

## ஒரு கதை



அ.சூரியன்

அவரின் செயல், கூடி நிற்கும் யாவரையும் திகைப்பில் ஆழ்த்தும். அவரது கெட்டிக்காரத்தனம் மூக்கில் விரலை வைக்கத் தோன்றும்.

இவைகளையெல்லாம்விட அவரது கண்டிப்பு, கரிசனை- அவர் மேல் கொண்ட மரியாதையை இன்னும் இறுகவைக்கும். எத்தனையோ புகழ் பூத்த பெரும் விளையாட்டுப் போட்டிகள் அவர் தலைமையில் நடந்தேறியிருக்கின்றன. பெரியவர் முதல் சிறியவர்வரை அனைவரும் அவரை அறிநது வைத்திருக்குமளவுக்கு அவர் பிரபல்யமாக இருந்தவர்.

ஆனால், இன்று மூலையில் ஒதுக்கப்பட்டு விட்டார். ஒரு திடகாத்திரமான விளையாட்டு வீரரை, திறமைசாலியை அனைவரும் ஓரம் கட்டிவிட்டார்கள். அரசாங்கம் ஓய்வூதியம் என்ற கொடையுடன் அவரை வீட்டிற்கு அனுப்பியாகிவிட்டது. அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் அது தன் கடமையைச் சரிவரச் செய்கிறது.

ஆனால்... படித்த சமுதாயம், சக அதிகாரிகள், அவரால் முன்னுக்கு வந்தவர்கள், அவரிடம் பயின்றவர்கள், உதவி பெற்ற நிலையினர் என்ன செய்தார்கள்? ஒன்றுமே செய்ய வேண்டாம்! அவருக்குரிய மரியாதையைக் கொடுக்கக்கூடவா முடியாது?

இப்பொழுதெல்லாம் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளுக்குப் போவார். பார்வையாளர்களில் ஒருவராகப் பங்குபற்றிவிட்டுத் திரும்பிவிடுவார். பதவியுடைய பிரதமவிருந்தினர்கள், அமைப்பாளர்கள் இவரை இடையில் கூடத் திரும்பிப்பார்ப்பது கிடையாது. ஏன்? நினைவு தெரிந்த நாளிலிருந்து விளையாட்டையே தன் வாழவாக்கி, பலவித பயிற்சிகள் பெற்று உண்மையான வீரனாக உலா வந்தவருக்குக் கௌரவம் கொடுத்தால்தான் என்ன? விளையாட்டுத் துறையை என்னவென்று அறியாதவர்களெல்லாம் பிரதம விருந்தினர்களாகவும், சிறப்பு விருந்தினர்களாகவும் இருக்க - சிறப்பு வீரன் ஒதுக்கப்படும் காரணம் என்ன? பதவியிலிருந்து ஓய்வு பெற்றால் திறமைகள் யாவும் இல்லையென்று ஆகிவிடுமா?

அறுபது வயதானாலும்கூட வறுமை அவரை இறுக்கிப் பற்றிப் பிடித்திருந்தது. போதாக்குறைக்கு பருவ வயதடைந்த இரு பெண் பிள்ளைகள் அவரிடம் வாழ்வை எதிர்பார்த்து, அவரின் முகம் பார்த்திருக்கின்றனர்.

இன்னும் ஒன்றையும் சொல்லியாக வேண்டும். எத்தனைதான் உடற்கட்டாய் இருந்தாலும் இதய நோய் என்ற அரக்கன் அவரையும் தனது இச்சைக்கு உடபடுத்தியிருந்தான். இந்நிலையிலும், இந்த வயதிலும் உழைக்க வேண்டிய நிர்ப்பந்தம் வேறு. பகுதி நேர ஆங்கில ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பித்தார்.

இன்று வெவ்வேறு பதவியில் இருந்தவர்கள் ஓய்வு பெற்றபோதும் அவர்களுக்கு பதவி உயர்வு வழங்கி சேவை பெறப்படுகிறது. இவைகூட வேண்டாம். பொருத்தமான வேறு வேலையைக் கூடவா வழங்கக்கூடாது? ஆனால்.... தன் முகத்தைக் கண்ணாடியில் பார்க்காது, பணத்தில், பதவியில் அதிகாரிகளின் காலடியில் பார்ப்பவர்கள் இவருக்கு வேலை கொடுக்கச் சம்மதிக்கவில்லை. நிறுவனம் ஒன்றில் விரிவுரையாளர் பதவிக்கு விண்ணப்பித்தார். நேர்முகப் பரீட்சைக்கான அனுமதி அட்டை வந்தது. கூடவே தேவையான வெற்றிடம் பிடித்தமானவர்களைக் கொண்டு நிரப்பியாகி விட்டது என்ற செய்தியும் கசிந்தது. ஆகையால் நேர்முகப் பரீட்சைக்குப் போகாமலேயே விட்டுவிட்டார். இவரால் என்னதான் செய்யமுடியும்?

இறைவன் வரம் தந்தாலும், பூசாரி அனுமதி தரவேண்டிய நிலமை. உண்மையான தொண்டனுக்கு வரம் நிறைவேற்றப்படவேயில்லை. இத்தொண்டன் வறுமையிலிருந்தும்கூட பூசாரி இரங்கவேயில்லை.

சரி அறிந்தவர், தெரிந்தவர், சிநேகிதர் என அறிந்து - கந்தோருக்கு ஏறினால், எந்த இடத்திலும் நடவாதது அங்கு நடக்கலாயிற்று. பல்லுப் பிடுங்கின பாம்பு என்பார்களே! அதே நிலமை அவருக்கு அங்கு நடந்தது. இவரால் சீற முடியுமா? சீறினால் யார் பயப்படுவார்கள்? கொத்தத்தான் பல் இருக்கின்றதா? இவர் பதவியில் இருந்த காலத்தில் பயப்பட்டவர்கள், கைகட்டி நின்றவர்கள் - பயமுறுத்தினார்கள், கர்ஜித்துக் கடிக்க வந்தார்கள். எங்கும் அவமானச் சின்னம் வரவேற்று மரியாதைசெய்தது.

கரையேற்றிவிட்ட படகு கடலுக்குள்ளேயே நிற்கின்றது. புயல், மழை, வெயில் யாவற்றிற்கும் மத்தியிலும் அலைக்கழியப்படுகிறது. படகைக் கரையேற்றுவது யார்? படகில் கால் வைத்துக் கரை சேர்ந்தவர்க்கு நன்றி கூடவா இல்லை?

இன்று இவர் சொல்வதெல்லாம் "குருத்தோலை சிரிக்கிறது" என்பதுதான். இவர் மட்டுமல்ல, இவரைப் போல பழுத்த ஓலைகள் பலரும் சொல்வதும் இதைத் தான்.

# ...பழைய கவிதை...

எனது பதினைந்தாவது வயதில்
படையிலிணைந்தேன்...
அதன் நான்காவது மடங்கில்
வீடு திரும்பினேன்...
வழியில் எதிர்ப்பட்டான்
என் கிராமத்தான் ஒருவன்.
"எனது வீட்டில் யாரிருக்கிறார்கள்?"
"மரங்கள் வளர்ந்து
பற்றைகள் அடர்ந்து
அதோ தெரிகிறது
உங்கள் வீடு"
"நாய்கள் தோண்டிய பள்ளத்தில்
முயல்கள் குடியேறிவிட்டன.
வீட்டு வளையிலிருந்து
புறாக்கள் பறக்கின்றன.
பின்வளவில் ஏதோ
காட்டுத் தானியம் வளர்ந்துள்ளது.
கிணற்றடியில் ஏதோ
காட்டுக் கனிகள்.."
தானியத்தைக் கொண்டு
கஞ்சி காய்ச்சினேன்.
கனிகளைக் கொண்டு
பானம் தயாரித்தேன்.
என்னுடன் அமர்ந்து
அவற்றைப் பகிர்ந்துண்ணத்தான்
எவருமேயில்லை...
வெளியே வந்து
கிழக்கை வெறித்தேன்..
ஆடைகளை
நனைத்துப் பெருகிற்று
என் கண்ணீர்.

இலக்கியச் சோலை

ஆங்கில மூலம்:- Arthur waley
தமிழில்:- சத்தியபாலன்

# உனக்கு மட்டும் தானா...?

இரவின் ஆழ்ந்த அமைதிக்குள் பனிப்போர்வை போர்த்தியிருக்கும் சூழல். காற்றின் கட்டளைப்படி சற்றே இலை அசைவு. மெதுவாய் ஊரும் முகில்கள். யாரும் பார்க்காத சோகத்தோடு அலைந்தலைந்து மறைந்தன. வீதியெங்கும் இருள் படர்ந்திருந்தது. அந்த ஒழுங்கையில் எட்டுப்பத்து வீடுகள் இருக்கலாம். மின்சாரம் நின்றுவிட்ட நாளாயிருக்கும். எல்லா வீடுகளிலும் குருட்டு வெளிச்சம் கசகசத்தது. விதிவிலக்கில்லாமல அந்த வீட்டிலும் லேசாய் ஒளி கசிந்திருந்தது. பூட்டிய கதவுக்குள்ளிருந்து வார்த்தைகள் வெளியே கசிய மறுத்தன. இவன் ஜன்னலோரம் ஒதுங்கி நின்றான்.

தூரத்தில் எங்கோ ஒரு ஒற்றை நாயின் ஓலம். ஒன்றைத் தொடர்ந்து இன்னொன்றாய் மீண்டும் மீண்டும் நாய்களின் அலறல்கள். நல்ல வேளையாய் அங்கு நாய் இல்லாதிருந்தது. நாய்களின் ஓய்ச்சலோடு அந்த வீட்டுக்குள்ளிருந்து சிறிசொன்றின் அழுகை ஒலி அவலமாய் எட்டிப்பார்க்கத் தொடங்கியது.

இவன் சற்றே விலகி சடைத்திருந்த வேம்பின் பின் மெல்ல மறைந்தான். வீட்டிற்குள் ஒலித்த குரல்களின் சத்தம் இப்போது வெளியேயும் கேட்கத்தொடங்கியிருந்தது. அந்திசாய்கிற வேளையில் அங்கு வந்த வேளையிலேயே, அவன் அந்த வீட்டுப் புறச் சூழல் பற்றி முடியுமானவரை அறிந்திருந்தான். இந்த வீட்டுக்கு அவர்கள் வந்து ஓரிரு மாதங்கள் தான் ஆகியிருக்க வேண்டும் புதிதாய் வாடகைக்கு வந்தவர்களாகவோ அல்லது இடம் பெயர்ந்தவர்களாகவோ இருக்கலாம். இதற்கு முன் ஒரு கிழவனும் கிழவியும்தான் அங்கு வசித்திருந்தார்கள். அது அவனுக்குத் தெரியும். கிழவன் அந்தக் காலத்தில் பொலிஸ் உத்தியோகத்தில் இருந்தாராம். இவனுக்கும் தெரியும். மசையை முறுக்கி விட்டுக்கொண்டு கம்பீரமாய் கிழவன் பவனிவருகையில் சிறிசுகளுக்கு குலைநடுங்கும். அப்போது அவனும் சிறுவனாக இருந்திருந்தான். அந்தப் பொலிஸ் பயத்தை அவனும் சிறிதும் குறையாமல் அனுபவிததான். பிறகு இப்படி எத்தனையோ பேரைப் பார்த்துப் பயம் விட்டுப் போனாலும், அந்தக் கிழவன் மீதிருந்த பயம் மட்டும் சற்றும் போகவில்லை. அதைப் பயம் என்பதா...? மதிப்பு என்பதா...? அல்லது சிறு பராயத்தில் அவனது ஆழ்மனதில் பதிந்துபோன ஏதோ ஒரு நுண்ணுணர்வு என்பதா....? ஏதோ ஒன்று அவனால் அந்தக் கிழவனை நெருங்க முடியவில்லை.

பின்னாளில் கிழவன் உறவுகளைப் பிரிந்து, தனிமையில் தளர்ந்துபோய் ஜீவனற்றுக் கிடக்கிற வேளைகளிற்கூட நெருங்க முயற்சித்ததில்லை.

அந்தக் கிழவன் இப்போது இல்லை. மூன்று மாதங்களுக்கு முன்பு கனடாவுக்கு கிழவியோடு போய்விட்ட பிறகு, இந்தக் குடும்பம் வந்திருக்க வேண்டும். இங்கு தான் வரவேண்டும் என்பது அவன் திட்டமிட்ட செயல் ஒன்றல்ல. ஆனால் ஊருக்குள் மற்ற வீடுகளெல்லாம் கொஞ்சம் எச்சரிக்கைத் தொனியோடு தென்பட்ட வேளையில், வேறு வழியின்றி இவன் இங்கே நுழைந்தான். இவனுக்கு முக்கியமாய் அறிய வேண்டிய விடயமாக நாய்கள் பற்றிய கவனம் இருந்தது. ஒரு பொழுது துரதிஷ்டவசமாய் ஒரு நாயிடம் மாட்டிக்கொண்டதில் ஆஸ்பத்திரிக் கட்டிலில் படுக்க வேணடியிருந்ததோடு, ஊசி வேறு போட்டுத் தொலைக்க வேண்டியிருந்தது. சின்னவன் வேறு அப்போது மலேரியாவில் இருந்தான். பெருந் தொல்லையாகிப்போனது. அதனால் இபபோது போகிற இடங்களில் மற்றெதைக் கவனிக்காவிட்டாலும் நாயைக் கவனிக்காமல் போவதில்லை.

அவன் யாரோடும் கூட்டுச் சேர்ந்ததில்லை. அதனால் வரும் வில்லங்கங்கள் பிறகு அவனையே பாதிக்கக்கூடாது. யாரையும் நம்பக்கூடாது. விடிகாலையில் போகிறபோக்கில் தோப்புக் கரணம் போட்டுவிட்டுப் போகிற அரசடிப் பிள்ளையாரைத் தவிர, மற்றவர்கள் காட்டிக் கொடுத்து விடக்கூடும். போனகிழமை 'சிவலையன்' பத்துப் பேரை 'விழிப்புக் குழுவுக்கு' காட்டிக்கொடுத்தது போல. சிவலையனைச் சொல்லிக் குற்றமில்லை. அடிதாங்காமல் சொல்லிவிட்டிருக்கிறான். பிள்ளையாரை யாரும் அடிக்கப்போவதுமில்லை. பிள்ளையார் காட்டிக் கொடுக்கப் போவதுமில்லை. அவர் மௌன சாமி. அதுதான் நல்லது.

முதன் முதல் அவன் ஆராய்ந்தது கோழிக்கூடு எங்காவது தென்படுகிறதா..? கோழிகளின் நடமாட்டம் எப்படி இருக்கிறது என்பது பற்றியே. அப்படி ஒரு சின்னக் குறியீடுதானும் அவனுக்கு நம்பிக்கையூட்டும்படி கிடைக்கா ததால் அவன் தனக்குள் சலித்துக் கொண்டான்.

"என்ன சனமப்பா இதுகள்... குழந்தை குட்டிகளோடை இருக்குதுகள். வருமானத்தைக் கூட்டுறதுக்கு கோழியையாவது வளர்க்கலாமே..."

அவனுடைய அனுமானம், சிந்தனையோட்டம் வீட்டிலுள்ளவர்களுக்குக் கேட்டிருக்கும் போல் தெரியவில்லை. உள்ளே சிறிசின் வீறிடல் இன்னும் நிற்கவில்லை. "உதென்ன உதுகள் அழுதால் முதுகிலை ரெண்டு போடுறதை விட்டிட்டு செல்லங் கொஞ்சுதுகள் போலை கிடக்கு..."

அவனது ஆதங்கத்துடனான விசாரணை தீர்ப்புக்கு வர முன்னர் ஆட்காட்டி ஒன்று தலைக்கு மேல் கத்திப் பறந்தது.

இவன் மீண்டும் ஜன்னலருகே வந்தான்.

"நான் என்ன செய்ய லக்ஸ்பிறே முடிஞ்சு போச்சு. நான் என்னத்தைக் குடுக்க..."

கொஞ்சம் தடிப்பாய் கரகரத்துக் கேட்டது பெண்குரல்.

"பெடியன் பாலுக்கு அழுறான்..." ஏதோ கண்டுபிடித்து விட்டதாய் இவன் உள்ளம் சிலிர்த்துக் கொண்டது. கூடவே இலேசான இளக்கம் வேறு. அந்த இளக்கத்தின் காரணம் வீட்டு நினைப்பு. சின்னவன்... அவனும் விடாக்கண்டவன். நினைத்ததைப் பெறும்வரைக்கும் அவன் அழுகை தீராது. இப்போது அவனும் ஏதாவது சாட்டுச் சொல்லி அழுது கொண்டு இருப்பானோ...?

இவனது சிந்தனை சட்டென்று கலைந்தது.

"வெறுந்தேத்தண்ணியாவது..."

"அதுவும் சீனி இல்லாமல் குடிக்கிறானில்லை..."

உள்ளே சிறுவனின் அழுகைக்குப் பின்னணியாய் எதை எதையோ போட்டுப்புரட்டுவது கேட்டது.

"காலமை அவிச்ச புட்டோட தான். மத்தியானம் மற்றதுகள் ரெண்டும் பட்டினி..."

மங்கி மங்கி அவளது குரல் முக்களித்தது. குழந்தையின் அழுகை இப்போது தேய்ந்திருந்தது.

"இதைப்போய் இப்ப சொன்னால்... இந்த ராவிருட்டிலை நான் எங்க போறது. இந்தக் கூலிக்காறனை நம்பி எவன் கடன் தருவான்...."

ஏலாமையில் நசுங்கிப் போன ஆணின் குரல்.

"நீங்கள் ஒண்டும் வெளிக்கிட வேண்டாம். மூத்தவன் தன்ரை உண்டியல் உடைச்சுப் பாண் வாங்கியந்துவிட்டான்...."

"என்னது உண்டியல் உடைச்சுப்போட்டானோ..."

ஏக்கம் பெரிதாகி எதிரொலித்தது.

"அதுக்கென்னப்பா இப்ப... அவரசத்துக் கெண்டு சேர்த்த காசு. அதுகளைப் பட்டினி போட்டுக் காசு சேர்க்க வேணுமோ!..."

வெளியே சில்லென்று பனி கொட்டியது. சுவரோரம் நெருங்கியபோது ஜன்னல் பூட்டப்படாமல் சாத்தப்பட்டிருப்பது தெரிந்தது. இடைவெளியூடே அவன் பார்வையைச் செலுத்தினான்.

உள்ளே கிழிந்த பாய்களில் இரண்டு சிறுசுகள் படுத்திருந்தன. அவள் குழந்தையை இன்னொரு புறமாய்க் கிடத்தினாள். அருகே இருந்த 'போச்சி'யில் வெறுந் தேநீர் சிறி தளவு எஞ்சியிருந்தது. கடைசியில் அதைக் குடித்துத் தான் குழந்தை உறங்கிப்போயிருக்க வேண்டும்.

அவள் உள்ளேபோய் ஒரு தட்டோடும் பேணிகளோடும் வந்தமர்ந்தாள். தேநீரைப் பேணியில் நிரப்பிக் கணவனிடம் கொடுத்தாள். தட்டில் எஞ்சியிருந்த கறுத்துப்போன பாண் துண்டுகளைக் காட்டிச்சொன்னாள்.

"சாப்பிடுங்கோ..."

"ம்.... ஹீம்... வேண்டாம்..." அவன் வேதனையோடு முனகினான.

"நிவாரணமும் தாறாங்கள் இல்லை..." முணுமுணுத்தான்.

"ஊரிலை இருந்தால் நிலத்தைக் கொத்தியாவது சீவிக்கலாம். இஞ்சை அதுவுமில்லை..."

தொடர்ந்து பெருமூச்செறிந்தான்.

"அதுக்கென்ன இப்ப. எல்லாருக்குந்தானே கஷ்ரம். ஏதோ சமாளிக்க வேண்டியதுதான். சாப்பிடுங்கோ இப்ப..."

அவள் சமாதானப்படுத்தினாள்.

கருகிப்போன மீதிப்பாண் துண்டுகளைத் தேநீரில் நனைத்து அவர்கள் சாப்பிட்டார்கள். ஒருவருக்கொருவர் ஆறுதல் சொல்லியவாறே விதியைச் சபித்துக் கொண்டு அவர்கள் சாப்பிட்டு முடித்தார்கள்.

வெளியே நின்றவன் ஜன்னலைவிட்டு விலகினான். பனிக்குளிர் இன்னும் அதீதமாய் முகத்தில் அடித்தது. அவன் அதைப் பொருட்படுத்தாமல் வீதியை நோக்கி நடந்தான்.

"நான் பறுவாயில்லை..." தனக்குள் முணுமுணுத்துக் கொண்டான். விறுவிறுவென்று தன் வீட்டை நோக்கி நடக்கவாரம்பித்தான்.




தாட்சாயணி

# பாலையும் சோலையும்

ஈழத்தின் மூத்த எழுத்தாளர்களுள் ஒருவர் சொக்கன். இவருடைய எழுத்துப்பணி அரை நூற்றாண்டுக்கு மேற்பட்டது. கல்விப் பணி நான்கு தசாப்தங்கள் கண்டது. இவர் லண்டனில் இருந்த பொழுது இலக்கிய அன்பர்கள் சிலரின் தூண்டுதலால் தமது கல்வி, இலக்கிய அனுபவங்களை முதன்மையாகக் கொண்டு தமது வரலாற்றை எழுதினார். "பாலையும் சோலையும்" என்ற தலைப்பில் அமைந்த மேற்குறித்த நூலின் (கணினிப்பிரதி ) சில பகுதிகளை இங்கு தொடர்ச்சியாகத் தருகின்றோம்.

எனது பாடசாலைக் குழப்படிகளும் வீட்டில் ஆசிரியர்களால் அறிவிக்கப்பட அங்கும் மூத்தோரின் தண்டனைகளுக்கு ஆளானேன்.

நான் தாய்க்கு ஒரே பிள்ளை. என் அன்னைக்கு நான் உயிர் ஆனாலும் ஆசிரியர்களோ, மூத்தோர்களோ என்னைக் கண்டிப்பதை அவர் ஒருகாலத்திலும் தடுத்தது கிடையாது. நான் ஒழுக்க சீலனாகவும், கல்வியில் முதன்மையானவனாகவும் ஆக வேண்டும் என்பதில் அவர் கொண்டிருந்த கரிசனையாலேயே எனக்குக் கிடைத்த தண்டனைகளைக் கண்டும், கேட்டும் தம்மளவில் மறைவில் கண்ணீர் விடுவதோடு சகித்துக் கொண்டார். 'அறுதலி வளர்த்த கழுதை என்ற பேரை எனக்கும் உனக்கும் தேடாதை மோனை' என்பாரேயன்றி அவர் ஒருநாளாயினும் எனக்குத் தடியெடுத்து அடித்ததில்லை. "நீ ஆமானவனுக்குப் பிள்ளையாய்ப் பிறந்தவன். அவற்றை பேருக்குக் களங்கம் தேடாதை" என்றும் அவர் அறிவுரை கூறுவது வழக்கம். என் தந்தை ஆமானவரா, இல்லையா என்று எனக்குத் தெரியாது. அவரை நான் எனது ஒரு வயதுப்



பராயத்திலேயே இழந்து விட்டேன் - அம்மாதான் என் கண்கண்ட தெய்வம்.

பாடசாலையில் நான் குழப்படிகளுக்கு மட்டும் அடி வாங்கவில்லை. பாடங்களிலே தவறுகள், பிழைகள், கவலையீனங்கள் என்று ஒவ்வொன்றுக்கும் அடிவாங்கினேன். எங்கள் தலைமை ஆசிரியராய் இருந்தவர் த.பொ.குழந்தைவேலு என்பவர். கன்னங்கரேலென்று கறுத்துத் திரண்ட உருவம். சட்டை, வேட்டியாவும் கதர் மயம். ஆனால், மாணவரைப் பொறுத்தவரையில் அவர் மகாத்மா காந்தி அல்லர். எதற்கும் அடி. எப்பொழுதும் அடி. கையிற் பிரம்புள்ள போதெல்லாம் அடி என்பனவே அவரின் கடைப்பிடிகள்.

நான்காம் வகுப்பிலே நிகழ்ந்தது இது. கரும்பலகையிலே கடிதம் எழுதும் முறையினை எழுதிக் காட்டிவிட்டு, எங்களைக் கடிதம் எழுதச் சொன்னார்.

வீட்டில் இரவு வேளைகளில் குப்பி விளக்கில் பெண்களுக்கு, 'உலகம் பலவிதக்கதை', 'விக்கிரமாதித்தன் கதை' போன்றவற்றை வாசித்துக் காட்டியும், மனத்தில் உதிப்பவற்றையெல்லாம் சிலேற்றிலும், கொப்பியிலும் எழுதித் தள்ளியும் வந்ததால் பெரும்பாலும் எழுத்துப் பிழையோ, வசனப் பிழையோ விடாதவன் என்று பெயர் எடுத்தவன் நான்.

ஆனால், கடிதத்தின் தொடக்கத்தில் எழுதப்படும் முகவரி, திகதி ஆகியவற்றை வலப்புறத்துச்சியில் எழுதாமல், இடப்புறத்துச்சியில் எழுதிவிட்டேன். இது

**கலாநிதி. சொக்கனின் வாழ்க்கைப் பதிவுகள்**

தான் நான் விட்ட தவறு. சிறு வயதுக் கவலையீனம் மன்னித்துத் திருத்தியிருக்கலாம்...

ஆனால், குழந்தைவேலருக்கோ ஒன்பது வயதுச் சிறுவன் விட்ட மாபெரும் பிழையாக அது தோன்றியது. சீற்றம் கொண்டார். அவரின் பிரம்பு என் முதுகைப் பதம் பார்த்தது. தோல் கிழிந்து இரத்தம் வடிந்தது. அது மட்டுமோ?

(தொடரும்...)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு
இடும்பை படாஅ தவர்.

- திருக்குறள்

# நமது நோக்கு

## ஆக்கமும் அழிவும்

அமைதிச்சூழலை வலுப்படுத்தக்கூடியதாக - குறிப்பாக கடற்பிராந்தியத்தில் எழும் நெருக்கடிகளை, பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடியதாக புதிய திட்டமொன்று வரையப்பட வேண்டுமென விடுதலைப் புலிகள் கோரியிருக்கின்றனர்.

நெடுந்தீவுச் சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகள் ஆத்திரமூட்டப்பட்டுள்ள நிலையிலும், அவர்களது பொறுமையைச் சோதிப்பதாக அமைந்துள்ளபோதும் - அமைதிநிலை நீடித்தாக வேண்டும் என்ற உறுதியிலிருந்து தளராதவர்களாக , விடுதலைப் புலிகள் இந்தக் கோரிக்கையை முன்வைத்திருக்கின்றனர்.

ஏற்கனவே - புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் விடுதலைப் புலிகளது கடற்பிராந்தியச் செயற்பாடுகள், போக்குவரத்துக்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தும் - கடற்படையினரால் இந்த இணக்கமானது கௌரவமான முறையில் பேணப்படவில்லை என்பதும், கண்காணிப்புக்குழு - கடற்படையின் இத்தகைய போக்குப்பற்றி உரியகவனம் எடுக்கவில்லை என்பதும் - பல முரண்பாடுகளையும் தோற்றுவிப்பதாகவே இருந்து வந்திருக்கின்றது.

இதன் தொடராக மிகத்தீவிரமான, பாரதூரமான சம்பவமே நெடுந்தீவுக் கடற்பரப்பில் நடந்திருக்கின்றது.

கடற்படையின் அடாவடித்தனமான செயற்பாடும், போர் நிறுத்தக்கண்காணிப்புக்குழுவின் பொறுப்பற்ற தன்மையும் - மூன்று போராளிகளின் உயிர்களைப் பலி வாங்கியிருக்கின்றது.

இத்தகைய சம்பவம் மூலம், இதுவரை புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரமும் போர்நிறுத்த நடைமுறைகளின் படியுமான நடத்தை நெறிகள் அப்பட்டமாக மீறப்பட்டிருப்பதுடன், கடற்பிராந்தியம் கடற்படையின் நடவடிக்கைகளால் இனியும் சர்ச்சைகளுக்குரிய பகுதியாகவே- திகழும் என்ற அச்சுறுத்தலும் தீவிரமாகியிருக்கின்றது.

இந்நிலையில் - கடற்பகுதியில் விடுதலைப் புலிகளின் நடமாட்டங்களையும், செயற்பாடுகளையும் உள்ளடக்கியதாக - கடற்படையின் எல்லைகளை வரையறுப்பதாக புதிய திட்டமொன்று வரையப்பட்டாலேயே - நெடுந்தீவுச் சம்பவம் போன்று இனியும் தொடராது தடுக்கமுடியும் என்பதை உறுதியாகவே விடுதலைப் புலிகள் வலியுறுத்தியிருக்கின்றனர்.

இதுபற்றி கண்காணிப்புக்குழுவுக்குத் தெரியப்படுத்தப்பட்டிருப்பதுடன், அவர்களும் புதிய திட்டமொன்று விரைந்து உருவாக்குவதற்குச் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை - மறுவளமாக குட்டையை மேலும் குழப்பும் செயற்பாடுகளும் நடைபெறாமலில்லை.

ஜனாதிபதி தரப்பிலிருந்தும், எதிர்க்கட்சிகளிடமிருந்தும், படைகளின் உயர்பீடத்தில் உள்ள சிலரிடமிருந்தும், ஊடகங்கள் சிலவற்றிடமிருந்தும் - இந்தப் பிரச்சினையின் உண்மையான நிலை மறைக்கப்பட்டு, மிக ஆபத்தான வகையில் திரிபுபடுத்தப்படும் செய்திகளும், தகவல்களுமே வெளியாகி வருகின்றன.

எப்பாடுபட்டும் அமைதி முயற்சிகளைச் சிதைத்து - மீண்டும் யுத்தத்திற்குள் அனைவரையும் சிக்கவைத்தே தீருவோம் எனக் கங்கணம் கட்டிநிற்கும் - இவர்களது செயற்பாடும், விஷமப் பிரசாரங்களும்- சமாதானத் தைச் சகதிக்குள் தள்ளிவிடுவதாகவே அமைந்துள்ளன.

இதுதான் மட்டுமன்றல்லாமல் - இலங்கைக் கடற்பிராந்தியத்தில் இந்திய - இலங்கை கடற்படையினரின் கூட்டு ரோந்து நடவடிக்கைக்குத் திட்டமிடும் பணியையும் ஜனாதிபதி சந்திரிகா மிக வேகமாக முன்னெடுத்து வருவதாகவும்-

நெடுந்தீவில் கடற்படையினர் நடந்துகொண்ட விதத்திற்கு அவர் பாராட்டுத் தெரிவித்திருப்பதாகவும் தெரியவருகின்றது.

ஜனாதிபதி சந்திரிகாவின் இந்த முயற்சிகள் - மிகவும் ஆபத்தானது மட்டுமல்லாது, அமைதி முயற்சிகளை நேரடியாகவே பாதிக்கச் செய்வதாகவும் உள்ளதை அதிகவனத்துடன் அனுக வேண்டியிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இலங்கைக் கடற்படையினரின் செயற்பாடுகளோடு இந்தியக் கடற்படையினரின் கூட்டு ரோந்து என்பது - கடற்பிராந்தியத்தில் எவ்வேளையும் பதற்றங்களையும், அரசியல் ரீதியான மற்றும் வேறு செயற்பாடுகளுடனான தலையீட்டையும் அதிகரிக்க வைக்கும் என்பதையும் மறுக்க முடியாது.

எனவே, புதிய திட்டவரைபில் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு, இந்த விடயங்களை மிக ஆழமாகப் பரிசீலிக்க வேண்டிய நிலையிலிருக்கின்றது.

ஒருபுறம் அமைதியைக் காத்தே தீருவதென விடுதலைப்புலிகளும், மறுபுறம் எவ்வாறாயினும் - அதனைச் சீரழிப்பதே என ஜனாதிபதியும் நிலையெடுத்துக் கொள்வதை சர்வதேச சமூகம் தனது கவனத்திற்கொள்ள வேண்டும்.

# நெடுந்தீவு கடலில் பாதுகாப்பு அதிகரிப்பு
# தொடர்ந்தும் சுழியோடிகள் தேடுதல்!

நெடுந்தீவுக் கடற்பகுதியில் கடற்படையினரின் பாதுகாப்புத் தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாகக் கடற்படையின் ஊடகப் பேச்சாளரான கப்டன் ஜெயந்த பெரேரா தெரிவித்தார்.

கடற்புலிகளின் படகு மூழ்கிய கடற்பகுதியில் கடற்படைச் சுழியோடிகள் கடந்த இரு நாட்களாகத் தேடுதல் நடத்தியுள்ளனர். இவர்கள் தொடர்ந்தும் இப்பகுதியில் தேடுதல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இக்கடற்பகுதியில் இருந்து இதுவரை எந்தத் தடயப் பொருட்களும் மீட்கப்படவில்லை எனத் தெரிவித்த கடற்படையின் ஊடகப் பேச்சாளர், இங்கிருந்து கிடைக்கக்கூடிய எந்தப் பொருளும் மேல் விசாரணைகளுக்கு பேருதவியாக அமையும் எனவும் தெரிவித்தார்.

# அரசின் இளைஞர் படையணிக்கு இராணுவ அதிகாரியே பொறுப்பு!

(கொழும்பு)

அரசாங்கத்தினால் அமைக்கப்படவுள்ள இளைஞர் படையணிக்கு இராணுவ அதிகாரி ஒருவர் பணிப்பாளராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

நாடு முழுவதும் 40 ஆயிரம் வேலையற்ற இளைஞர்களை இளைஞர் படையணியில் சேர்க்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. அடுத்த மாதம் முதல் இந்த இளைஞர் படையணி செயற்படத் தொடங்கும் என, அரசாங்கம் அறிவித்துள்ளது.

இளைஞர் படையணிக்கான பணிப்பாளராக, இராணுவ அதிகாரி கேணல் சன்ன குணதிலக நியமிக்கப்பட்டுள்ளார். அத்துடன் இளைஞர் படையணிக்கான ஆலோசகர்களாக - சரித்த ரத்வத்த, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ, தேசிய கடேற் படையணியின் கட்டளை அதிகாரி சுனில் நவரட்ண ஆகியோர் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

இளைஞர் படையணிப் பயிற்சி அதிகாரிகளாக முப்படை அதிகாரிகளே பணியாற்றவுள்ளனர். இவர்களுக்கான உணவு, உடை, வசிப்பிட வசதிகளை அரசாங்கமே வழங்கவுள்ளது. இதற்கென இவ்வருடத்துக்கு ஒரு மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மார்ச் மாதம் முதல் செயற்படவுள்ள இளைஞர் படையணியில், 40 ஆயிரம் வேலையற்ற இளைஞர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். இவர்களுக்கு மாதாந்தம் இரண்டாயிரம் ரூபா உதவித் தொகையாக வழங்கப்படவுள்ளது.

18 மாத காலம் இவர்களுக்கு பயிற்சி வழங்கப்படவுள்ளது. ஆங்கிலம், தகவல் தொழில் நுட்பம் ஆகிய பாடங்கள் இவர்களுக்குக் கற்பிக்கப்படவுள்ளது.

ரந்தம்பே, கெயாந்தவ, கிறமினியாய, எம்பிலிப்பிட்டிய ஆகிய இளைஞர் நிலையங்களில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. இவற்றில் ஒரே தடவையில் 200 ஆண்களுக்கும் 50 பெண்களுக்கும் பயிற்சிகள் வழங்கப்படும் என, கொள்கைத் திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சின் மேலதிக செயலாளர் ஆர்.ஆர்.அமரதுங்க தெரிவித்தார்.

# ஆடம்பரக் கப்பல் கொழும்பு வருகிறது

'மிதக்கும் அரண்மனை' என அழைக்கப்படும் 'குயீன் எலிசபேத் 1' ஆடம்பரக் கப்பல், மார்ச் 18 ஆம் திகதி கொழும்புத் துறைமுகத்துக்கு வரவுள்ளது.

ஜனவரி 5 ஆம் திகதி உலகைச் சுற்றும் பயணத்தை ஆரம்பித்த இந்த உல்லாசக் கப்பல், 1778 பயணிகளை ஏற்றும் வசதிகொண்டது. 973 அடி நீளமானதும், 104 அடி அகலமானதுமான இந்தக் கப்பல் 10 வருடங்களுக்கு முன்னர் கொழும்புக்கு வந்திருந்தது.

எதிர்வரும் மார்ச் 18 ஆம் திகதி சிங்கப்பூரிலிருந்து இக் கப்பல் கொழும்புத் துறைமுகத்தை வந்தடையும் எனத் தெரியவருகிறது.

# அமைதி முயற்சிகளுக்கு துணையாக மனித உரிமை வழிகாட்டு நெறி

## இயன் மார்ட்டினை இருதரப்பும் கோரின

(பேர்ளின்)

மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச விதிமுறைகளுக்கு அமைய எவ்வாறு செயற்படவேண்டும் என்பது குறித்த வழிகாட்டும் நெறி ஒன்று உருவாக்கப்படவுள்ளது.

நேற்றைய பேர்ளின் பேச்சுக்களின்போது இவ்வழிகாட்டல் நெறியை உருவாக்குவது தொடர்பாக அரசும் விடுதலைப் புலிகளும் இணைந்து சர்வதேச மன்னிப்புச் சபையின் முன்னாள் பணிப்பாளரான இயன் மார்ட்டினிடம் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர்.

அரசும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் பேர்ளின் பேச்சுக்களின்போது மனித உரிமைகள் விவகாரம் குறித்து விரிவாக ஆராய்ந்தனர். இதன்போது சர்வதேச மன்னிப்புச் சபையின் அதிகாரியான இயன் மார்ட்டினும் கலந்துகொண்டார்.

ஜப்பானில் நடைபெறவுள்ள அடுத்த கட்டச் சுற்றுப் பேச்சின் போது மனித உரிமை விவகாரம் குறித்து மேலும் விரிவாக ஆராயப்படவுள்ளது.

மனித உரிமைகள் விடயங்களை இலகுவாகக் கையாளுவதற்காக வலுவான பொறிமுறை ஒன்றும் உருவாக்கப்படவுள்ளது.

அதேவேளை, மேற்படி விவகாரங்களைக் கையாண்டு வருகின்ற அரசு மற்றும் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளுக்கு மனித உரிமைகள் தொடர்பாகவும் சர்வதேச சட்ட நடை முறைகள் தொடர்பாகவும் விசேட பயிற்சி வழங்கப்படவுள்ளது.

இதுபோன்ற விசேட பயிற்சி ஒன்று, அரசின் பொலிஸ் அதிகாரிகளுக்கும், சிறைச்சாலை அதிகாரிகளுக்கும் வழங்கப்படவுள்ளது.

# கல்வியியல் கல்லூரியில் பயிற்சி முடித்தோர்;
# 3000 பேருக்கு அடுத்தமாதம் ஆசிரிய நியமனம்

(யாழ்ப்பாணம்)

கல்வியியல் கல்லூரிகளில் டிப்ளோமா கற்கை நெறியைப் பூர்த்தி செய்த மூவாயிரம் மாணவர்களுக்கு அடுத்த மாதம் நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்கப்படவுள்ளதாகக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

2002 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இறுதிப் பரீட்சையில் சித்திபெற்று ஆசிரிய நியமனத்துக்குத் தகைமைபெற்ற மூவாயிரம் பேருக்கே நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் இந்த வருடம் முதல் பட்டதாரி ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் நியமனத்தை 750 இல் இருந்து 1250 ஆக அதிகரிக்கவும் அரசாங்கத்தால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இதேவேளை, இவ்வருடத்தில் இருந்து, கல்வியியல் கல்லூரிகளுக்கு அனுமதிக்கும் மாணவர்களின் தொகையை 3295 ஆக அதிகரிக்கவும் முடிவுசெய்யப்பட்டுள்ளது.

வட-கிழக்கு மற்றும் எல்லைப் புறங்களில் பணியாற்றிய தொண்டராசிரியர்களுக்கு ஆசிரிய நியமனங்கள் வழங்குவது குறித்து அரசாங்கம் ஆலோசித்து வருவதாகவும், இவர்களில் தராதரம் உள்ளவர்களுக்குக் கல்வியியல் கல்லூரிகளில் அனுமதி வழங்குவது குறித்து ஆராயப்படுவதாகவும் கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

# வவுனியாவிலும் தீவகத்திலும் கறுப்புக் கொடிகள் அறுப்பு!

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவில் வீரச்சாவடைந்த போராளிகளுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக அனுஷ்டிக்கப்பட்ட துக்கதினத்தையொட்டி வவுனியாவில் கட்டப்பட்ட கறுப்புக்கொடிகளைப் பொலிஸார் அகற்றியுள்ளனர்.

நெடுந்தீவுக் கடற்பரப்பில் வீரச்சாவடைந்த மூன்று போராளிகளுக்கும் அஞ்சலி செலுத்தும் வகையில், நேற்றுமுன்தினம் அனுஷ்டிக்கப்பட்ட துக்கதினத்தையொட்டிக் கட்டப்பட்ட கறுப்புக்கொடிகளையே வவுனியா நகரம் உட்பட பல்வேறு பகுதிகளில் பொலிஸார் அகற்றியுள்ளனர்.

ஆனால், பொலிஸாரால் அறுத்தெறியப்பட்ட கறுப்புக்கொடிகள், தோரணங்களை பொதுமக்கள் மீண்டும் கட்டி தமது துக்கத்தை வெளிப்படுத்தினர்.

அதேவேளை, யாழ்.தீவகப் பகுதிகளில் சில இடங்களிலும் இவ்வாறு கட்டப்பட்டிருந்த கறுப்புக்கொடிகளைப் படையினர் அகற்றியுள்ளனர். அல்லைப்பிட்டிச் சோதனைச்சாவடியின் ஊடாகச் செல்லும் வாகனங்களில் கட்டப்பட்டிருந்த கறுப்புக் கொடிகளும் கடற்படையினரால் அகற்றப்பட்டிருக்கின்றன. (113)

# மீண்டும் மீண்டும் தொற்றுக் காய்ச்சல் தடுக்க புதிய சித்த மருத்துவ சிகிச்சை!

(கூழாவடி)

காய்ச்சலினால் பீடிக்கப்பட்டவர்கள் மீண்டும் மீண்டும் தொற்றுக் காய்ச்சலுக்கு உள்ளாவதைத் தடுப்பதற்கான சித்தமருத்துவ சிகிச்சை முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

குடாநாட்டில் அண்மைக்காலமாகக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டவர்களுக்கு மீளவும் தொற்றுக் காய்ச்சல் ஏற்படுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

மேற்படி தொற்றுக்காய்ச்சலினை திரும்பத் திரும்பவராது தடுப்பதற்கும், நோய் எதிர்ப்புச் சக்தியை ஏற்படுத்தக் கூடியதான குடிநீர் வகை மூலம் கட்டுப்படுத்தமுடியும் என இனங்காணப்பட்டுள்ளது.

சித்த மருத்துவத்தில் கூறப்பட்டுள்ள விதிமுறைகளின் பிரகாரம் இந்த நவரச ஊறல் என்ற குடிநீர் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குடிநீர் கைதடி சித்த மருத்துவப் போதனாவைத்தியசாலையில் நோயாளர்களுக்கு வழங்கப்பட்டுவருகின்றது.

(39,ச)

# தந்தை செல்வநாயகத்துடன் பணியாற்றிய கட்சி உறுப்பினர்களைக் கௌரவிக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வாவுடன் 1949 ஆம் ஆண்டு முதல் 1965 ஆம் ஆண்டுவரை கட்சிக்காக உழைத்த கட்சி உறுப்பினர்களைக் கௌரவிக்கத் தந்தை செல்வா நினைவு அறங்காவற்குழு ஏற்பாடு செய்துள்ளது.

தந்தை செல்வாவுடன் பணிபுரிந்த வட-கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்தவர்களை இனங்கண்டு - அவர்களைக் கௌரவிப்பதென அறங்காவற் குழுவின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

ஏப்ரல் 26 ஆம் திகதி இந்த கௌரவிப்பு நிகழ்வு இடம்பெறவுள்ளது. இதனால் தந்தை செல்வாவுடன் பணியாற்றிய கட்சி உறுப்பினர்கள் தமது விபரங்களை- செயலாளர், தந்தை செல்வா அறங்காவற்குழு, நெல்லியடி ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(க)

# பிரான்ஸ் உதவியுடன் தீவகத்தில் அரை நிரந்தர வீடுகள் அமைப்பு!

தீவகப்பகுதியில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்குக் குடியிருப்பு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுவருகின்றது.

இந்தப் பிரதேசத்தில் கடந்த காலயுத்த நடவடிக்கையினால் இடம்பெயர்ந்தவர்கள் மீளக்குடியமர்ந்து வருகின்றனர்.

இவர்களில் 266 குடும்பங்களுக்கு அரை நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுக்க பிரான்ஸ் அரசாங்கம் முன்வந்துள்ளது.

குடாநாட்டில் பிரான்ஸ் அரசின் நிதியுதவியிலான வீடமைப்பு வசதிகளை கரித்தாஸ் நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

இவ்வீடமைப்பு வேலைகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை அந்த நிறுவனம் ஆரம்பித்துள்ளது.

தீவகத்தில் பிரான்ஸ் உதவியுடன் அமைக்கப்படுகின்ற அரை நிரந்தர வீடமைப்புத்திட்டத்தை நாளை மறுநாள் யாழ். வரும் பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சர் பார்வையிடுவார் எனவும் தெரியவருகின்றது.

(02)

## அதிபராக நியமனம்

அல்வாய் அம்பாள் வித்தியாலயத்தின் அதிபராக எஸ்.ஏ.தேவச்சந்திரன் இம்மாதம் முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் வர்த்தகத்துறை ஆசிரியராகக் கடமையாற்றிய இவர், அதிபராகப் பதவி உயர்வு பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(17)

## ஹாட்லியின் பிரதி அதிபராக குணசீலன்

(மானிப்பாய்)

ஹாட்லிக்கல்லூரியின் பிரதி அதிபராக குணசீலன் கடந்த 3 ஆம் திகதிமுதல் வலயக்கல்வித் திணைக்களத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

# சேதமடைந்த தபால் நிலையங்கள்; நவீன வசதிகளுடன் புனரமைப்பு!

## மதிப்பீடுகளை மேற்கொள்ளப் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்தகால யுத்த நடவடிக்கைகளால் சேதமடைந்த குடாநாட்டுத் தபால் நிலையங்கள் நவீனவசதிகளுடன் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

குடாநாட்டில் இயங்கிவரும் தபால் நிலையங்கள் யுத்த நடவடிக்கையினால் சேதமடைந்தும், தளபாடங்கள் காணாமல் போயும் அடிப்படை வசதிகளின்றி இயங்கி வருகின்றன.

இவ்வாறான தபால் நிலையங்களை இனங்கண்டு, அவற்றினைப் புனரமைப்புச் செய்வதற்கான மதிப்பீடுகளை மேற்கொள்ளுமாறு செயற்பாடுகளுக்கான அஞ்சல் மா அதிபர் சேனதீர - பிரதேச அஞ்சல் அத்தியட்சகருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

அதேவேளை, குடாநாட்டுத் தபால் நிலையங்களில் நிலவிவரும் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை தபால் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதாகத் தபால் திணைக்கள வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

(ச)

# கிராம அலுவலர் இருவருக்கு நெடுந்தீவில் மீள் நியமனம்!

(நெடுந்தீவு)

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நீண்டகாலமாக நிலவிவந்த கிராம அலுவர்களுக்கான வெற்றிடம் நிரப்பப்பட்டுள்ளது.

நெடுந்தீவு தெற்குக் கிராம அலுவலராக கா.கோபாலபிள்ளை, நெடுந்தீவு மத்தி கிராம அலுவராக க.பசுபதி ஆகிய இரு ஓய்வுபெற்ற கிராம அலுவலர்களும் ஒப்பந்த அடிப்படையில் மீள நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் நெடுந்தீவில் இரு பிரிவுகளில் நிலவிய கிராம அலுவலர் வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.(113)

## பாடுமீன் வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட கழகங்களுக்கிடையே நடைபெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் கடந்த 7 ஆம் திகதி இடம்பெற்ற ஆட்டத்தில் குருநகர் பாடுமீன் அணி வெற்றி பெற்றது.




நமது ஈழநாடு வழங்கும்




உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

பரிசுப் போட்டி

MEGA

முதற்பரிசு - 25,000

வழங்குவோர்: RATNAGOPALS - இரத்தின கோபால்ஸ்

[இணைந்த நிறுவனங்கள்]

63, 65 கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

ஃகீறோ ஃகொண்டா மோட்டார் சைக்கிளின் யாழ்ப்பாண விற்பனை முகவர்.

இரண்டாம் பரிசு - 15,000

வழங்குவோர்: 1. ஜொனெக்ஸ் மல்ரி பலஸ்

YONEX MULTI PALACE

விளையாட்டு உபகரண விற்பனையாளர்கள்.

76, KASTHUREIAR ROAD, JAFFNA



2. SAMUDRA TRADES LTD

3/2 STANLEY ROAD, JAFFNA

டீசல் என்ஜின், நெல் குற்றும், மா அரைக்கும், இயந்திரங்கள் உதிரிப்பாக விற்பனையாளர்கள்.

மூன்றாம் பரிசு - 10,000

வழங்குவோர்: சந்தியா மல்ரிகோட்யாட்



531, பருத்தித்துறை வீதி, நல்லூர், பிரதான வீதி, பண்டத்தரிப்பு

Fancy goods, gift items, fevicryl & acron paint items.

இன்னும் ஏராளமான ஆறுதல் பரிசுகள்!
வினாக்கொத்துக்கு விடை தந்து பரிசுகளை
அள்ளிச் செல்லுங்கள்!!

உலகக் கிண்ண கிரிக்கெட் - 2003

வெல்லுங்கள்...! அள்ளுங்கள்...!

உலகக் கிண்ணக் கிரிக்கெட் பற்றிய வினாக்களுக்கு விடை தந்து பணப்பரிசுகளை, வெகுமதிகளை உங்களதாக்குங்கள்.

1. உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி 1975 இல் முதன் முதலாக எந்த நாட்டில் நடைபெற்றது? (....................)
2. இரண்டு முறை தொடர்ச்சியாக உலகக் கிண்ணத்தை வென்று மூன்றாவது முறையாக வெல்லும் வாய்ப்பை இழந்த அணி எது? (....................)
3. 2003 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகள் எந்தெந்த நாடுகளில் நடைபெறப்போகின்றன? (....................)
4. 2003 உலகக் கிண்ணப் போட்டிகளில் ஆட்டத்தொடர் நாயகனாக (MAN OF THE SERIES) விளங்கப்போகும் வீரன் யார்? (....................)
5. 2003 உலகக் கிண்ணத்தை வெற்றி கொள்ளப்போகும் அணி யாது? (....................)

பூர்த்தி செய்துவிட்டீர்களா...? இது போன்ற ஐந்து கூப்பன்களை ஒரே வகையில் பூர்த்தி செய்து, எதிர்வரும் மார்ச் 06 ஆம் திகதிக்கு முன்பாக -

'உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003'
நமது ஈழநாடு,
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்குத் தபாலிலோ, நேரிலோ அனுப்பி வையுங்கள்.

பெயர்: ------------------------------
வயது: ------------------------------
முகவரி: ------------------------------
------------------------------




*சரியான விடைகளை எழுதுபவர்களிலிருந்து அதிர்ஷ்டசாலிகள் தேர்ந்தெடுக்கப்படுவர்.*

*போட்டி முடிவுகள் மார்ச் 28 ஆம் திகதியன்று 'நமது ஈழநாடு' பத்திரிகையில் வெளியாகும்.*



# ஐ.சி.சி. உலகக் கிண்ணம் - 2003







### ரிக்கி தோமஸ் பொண்டிங்
**(அணித்தலைவர்)**

*பிறந்தது* - 19.12.1974 டஸ்மேனியா.
*அணிகள்* - டஸ்மேனியா, அவுஸ்திரேலியா.
வலதுகைத் துடுப்பாட்டம்.
வலதுகை **MEDIUM.**
வலதுகை **OFF BREAK.**
*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் இலங்கை 95/96.
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் தெ.ஆ. 94/95.

கடந்த ஐந்து வருடங்கள் தன்னிகரில்லா அணியில் ஒருவர். இன்று தலைவர். டஸ்மேனியாவில் இருந்து தலைமைப் பதவி வகிக்கும் முதல் நபர். சிறந்த துடுப்பாட்ட களத்தடுப்பு வீரர். 20 வயதில் டெஸ்ட் அறிமுகம். ஆரம்பத்தில் 6 ஆவது இலக்கத் துடுப்பாட்ட வீரர். தற்போது பெருமைமிகு 3 ஆவது இலக்கத் துடுப்பாட்ட வீரர். எதிர்காலம் இவரது கையில். டெஸ்ட் - 64, ஓட்டங்கள் 4264, கூடியது 197, சதம் 14, அரைச்சதம் 17, ஒருநாள் -157, ஓட்டங்கள் 5580, கூடியது 145, சதம் 11, அரைச்சதம் 30.

### அடம் கிரெய்க் கில்கிறிஸ்ட்
**(உதவித் தலைவர்)**



*பிறந்தது* - 14.11.1971
*அணிகள்* - நியூசவுத் வேல்ஸ், வெஸ்ரன் ஒஸ்ரேலியா, அவுஸ்திரேலியா.
இடதுகைத் துடுப்பாட்டம்.
வலதுகை **OFF BREAK.**
விக்கெட் காப்பாளர்.
*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் பாகிஸ்தான் 99/2000
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் தென்னாபிரிக்கா 96/97

தனது முதல் விருப்பான விக்கெட் காப்புப் பதவிக்காக பிராந்தியம் மாறியவர். அதில் வெற்றி. இன்றுவரை இயன் ஹீலிக்குப் பதிலாக இவரா என்ற கேள்வியைப் பொய்யாக்கியவர். அணியின் முக்கிய வீரர். ஆரம்பத் துடுப்பாட்ட அதிரடி வீரர். ஹேடனிடம் கேட்டால் சொல்வார். பந்து வீச்சாளர்களை ஆட்டத்தின் ஆரம்பத்திலேயே மனம் சோரச் செய்பவர். டெஸ்ட் - 39, ஓட்டங்கள் 2615, கூடியது 204, சதம் 7, அரைச்சதம் 14, பிடிகள் 155, ஸ்ரம்ப் **(Stump)** 13, ஒருநாள் -152, ஓட்டங்கள் 4817, கூடியது 154, சதம் 8, அரைச்சதம் 27, பிடிகள் 212, ஸ்ரம்ப் 37.




### இயன் ஜோசப் ஹார்வி

*பிறந்தது* - 10.04.1972
*அணிகள்* - விக்ரோரியா, குளோஸ்டர் ஷயர், அவுஸ்திரேலியா.
வலதுகைத் துடுப்பாட்டம்.
வலதுகை **MEDIUM.**
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் தெ.ஆபிரிக்கா 97/98.

93 இலிருந்து முதற்தர ஆட்ட வீரர் ஒருநாள் **SPECIALIST.** சகலதுறை வீரர். பந்துவீச்சில் கூடிய கவனம். முதற்தர சகலதுறை வீரர் என்று இன்னும் பெயர்பெறவில்லை. உலகக் கிண்ணத் தெரிவு அணியிலிருந்து ஷேன் வட்சன் விலக நேரிட, அந்த இடத்தைப் பிடித்த மிகுதி 15 பேரில் ஒருவர். ஒருநாள் -43, ஓட்டம் 429, விக்கெட்டுக்கள் 47, திறமை 4/28.

### மத்யூ லோரன்ஸ் ஹேடன்



*பிறந்தது* - 29.10.1971
*அணிகள்* - குயீன்ஸ்லாந்து, ஹம்ப்ஷயர், நொதம்ப்டன் ஷயர் (இங்), அவுஸ்திரேலியா.
இடதுகைத் துடுப்பாட்ட வீரர்.
வலதுகை **MEDIUM.**
*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் தெ.ஆபிரிக்கா 93/94.
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் இங்கிலாந்து 1993

இவரைச் சந்தித்த எந்தப் பந்தும் மைதானத்தின் அத்தனை பகுதியையும் தழுவியிருக்கும். அப்பாவியான முகத்தோற்றம். ஆனால், பந்தைக் கண்டால் ஏன் இத்தனை குரூரம்? பயிற்சிக்காக நிறைய நேரம் ஒதுக்குபவர். 4 டபிள் செஞ்சரி சோடியில் இவரும் ஒருவர் (மற்றவர் லேங்கர்). பருவகாலங்களில் கூடுதல் ஓட்டம் இவருக்கு சர்வசாதாரணம். திடகாத்திரமான தேகம்.




### ஜேம்ஸ் பட்ரிக் மேஹர்

*பிறந்தது* - 27.02.1974
*அணிகள்* - குயின்லாந்து, கிளமோர்கன் (இங்), அவுஸ்திரேலியா.
இடதுகைத் துடுப்பாட்டம்.
வலதுகை **MEDIUM.**
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் நியூசிலாந்து 97/98.

ஒருநாள் **SPECIALIST.** ஆரம்பத் துடுப்பாட்டவீரர். அடித்து ஆடும் ஆவல் நிறைந்தவர். கிரிக்கெட் சூட்சுமங்கள் நிறையக்கொண்டவர். சர்வதேச ரீதியில் இவருக்கு கிரிக்கெட் சந்தர்ப்பங்கள் நிறைய உண்டு. ஒருநாள் -19, ஓட்டங்கள் 343.

### டேமியன் றிச்சர்ட் மாட்டின்




*பிறந்தது* - 21.10.1971
*அணிகள்* - வெஸ்டர்ன் ஒஸ்ரேலியா, லீஸ்டர்ஷயர் (இங்), அவுஸ்திரேலியா.
வலதுகைத் துடுப்பாட்டம்.
வலதுகை **MEDIUM.**


19 வயதிற்குட்பட்ட தேசிய அணியின் தலைவராக இருந்தவர். 21 வயதில் டெஸ்ட் அணிக்குள் நுழைந்தவர். மத்திய வரிசையில் ஒரு இடம் இவருக்குச் சொந்தம். பந்தை நொருக்குவதில் ஒரு சுவாரஸ்யம். நம்பகமான துடுப்பாட்ட வீரர். டெஸ்ட் - 30. ஓட்டங்கள் 2000, கூடியது 133, சதம் 5, அரைச்சதம் 13, ஒருநாள்-113, ஓட்டம் 2609, கூடியது 144, சதம் 4, அரைச்சதம் 12.

### கிளென் டொனால்ட் மக்ரா

*பிறந்தது* - 09.02.1970
*அணிகள்* - வூஸ்டர்ஷயர் (இங்), நியூசவுத்வேல்ஸ், அவுஸ்திரேலியா.
வலதுகைத் துடுப்பாட்டம்.
வலதுகை **FAST MEDIUM.**
*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் நியூசிலாந்து 93/94
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் தென்னாபிரிக்கா 93/94.



சினிமாக் கதாநாயகனைவிடப் பிரபல்யமானவர். இவர் உலகின் **NO 1 - DEVASTATING BOWLER.** பந்துவீச்சுப்பாணியே அலாதி. பொப்விலிஸ் + டெனிஸ்லிலி = மக்ரா. சாதனைப் பட்டியல். **SORRY** இடம் காணாது. துடுப்பாட்ட வீரரின் பலவீனத்தைக் கண்டுபிடிப்பதில் சத்திரசிகிச்சை நிபுணர். கிழக்கே உதிக்கும் சூரியன். டெஸ்ட் - 91. விக்கெட் 422, திறமை 8/38, ஒருநாள் -168, விக்கெட் 256, திறமை 5/14.







### மைக்கல் பெவன்

*பிறந்தது* - 08.05.1970
*அணிகள்* - சவுத் ஒஸ்ரேலியா, நியூசவுத்வேல்ஸ், யோர்க்ஷயர் (இங்), லீஸ்டர்ஷயர் (இங்), சசெக்ஸ் (இங்), அவுஸ்திரேலியா.
இடதுகைத் துடுப்பாட்டம்.
இடதுகை மெது **CHINAMAN.**
*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் பாகிஸ்தான் 94/95
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் இலங்கை 93/94

சிறந்த களத்தடுப்பாளர். நுட்பம் நிறைந்த துடுப்பாட்ட வீரர். இலகுவில் விக்கெட் இழக்காதவர். களத்தடுப்பு இடைவெளிகளில் பந்தைச் செலுத்தும் கணித மூளை. ஒன்றை இரண்டாக்கும், இரண்டை மூன்றாக்கும் ஓட்ட வேகம். அணியில் நிரந்தர இடம். சர்ச்சையே இல்லை. முன்வரிசை ஆட்டக்காரர். ஒருநாள் **SPECIALIST**, ஒருநாள் - 196, ஓட்டங்கள் 6028, கூடியது 108, சதம் 6, அரைச்சதம் 39. எந்தக் களமும் இவருக்கு அமர்க்களம்.


### அன்ட்ரூ ஜோன் பைக்கல்



*பிறந்தது* - 27.08.1970
*அணிகள்* - குயீன்ஸ்லாந்து, வூஸ்டர்ஷயர் (இங்), அவுஸ்திரேலியா.
வலதுகைத் துடுப்பாட்டம்.
வலதுகை **FAST MEDIUM.**
*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் மேற்கிந்தியா 96/97
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் மேற்கிந்தியா 96/97

நேர்த்தியான **LINE AND LENGTH.**

துடுப்பாட்ட வீரரை நிம்மதியாக இருக்க அனுமதிக்காத இறுக்கமான பந்து வீச்சு. நிறைய சர்வதேச ஆட்டங்கள் விளையாடியவரல்ல. இந்த உலகக் கிண்ணம் இவருக்கு முக்கியமானதாக இருக்கும்.




### ஜேஸன் நீல் ஜிலெஸ்பி

*பிறந்தது* - 19.04.1975
*அணிகள்* - சவுத் ஒஸ்ரேலியா, அவுஸ்திரேலியா.
வலதுகை வேகப் பந்துவீச்சு.
வலதுகைத் துடுப்பாட்டம்.
*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் மேற்கிந்தியா 96/97.
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் இலங்கை 96/97.

உபாதைகள், காயங்கள் இவரது இரண்டு வருடங்களை விழுங்கியது. துல்லியமான அச்சுறுத்தும் பந்து வீச்சாளர். மிகுந்த ஆற்றல் நிறைந்தவர். தொடரான எண்ணிறைநத உபாதைகளுக்கப்பாலும் தீக்குளித்து உயிர்த்தெழுந்த பீனிகஸ் பறவை. முதற்தர ஆட்டங்களின் முதல் ஓவரிலேயே தேசிய அணியில் இவருக்கு ஒரு இடம் ஒதுக்கப்பட்டது. டெஸ்ட் -39, விக்கெட்டுக்கள் 146, திறமை 7/37. ஒருநாள் -40, விக்கெட் 71. திறமை 5/22.

உலகக் கிண்ணப் போட்டிகளில் நிறையப் பந்துவீச்சாளருக்கு அலுப்பிருக்கிறது. ஒருநாள் - 54. ஓட்டங்கள் 1958, கூடியது 146, டெஸ்ட் -38, ஓட்டங்கள் 3096, கூடியது 203, சதம் 12, அரைச்சதம் 10.




### ஜோர்ஜ் பிரட்லி ஹொக்

*பிறந்தது* - 06.02.1971
*அணிகள்* - வெஸ்ரன் ஒஸ்ரேலியா, அவுஸ்திரேலியா.
இடதுகைத் துடுப்பாட்டம்
இடதுகை மெது **CHINAMAN.**
*ஒருநாள் அறிமுகம்* - சிம்பாப்வே 1996/97

மத்திய வரிசைத் துடுப்பாட்டம். கச்சிதமான பந்துவீச்சு. திறமையான களத்தடுப்பு. இவரது அற்புதமான **CATCHES** இன்றும் பேசப்படும். ஒருநாள்-15, விக்கெட் 15, திறமை 3/37. அவதானிக்கப்படுவதற்கு ஒருவர் இவர்.

### பிரெட் லீ



*பிறந்தது* - 08.11.1976
*அணிகள்* - நியூ சவுத்வேல்ஸ், அவுஸ்ரேலியா.
வலதுகை வேகப்பந்து வீச்சு.
வலதுகைத் துடுப்பாட்டம்.
*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் இந்தியா 1999/2000.
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் பாகிஸ்தான் 1996/97.

இவர் **VERY HANDSOME.** சொஹெய்ப் அக்தாரா, இவரா உலகின் அதிவேகப் பந்துவீச்சாளர்? இவரது பந்துவீச்சு நேர்த்தியும், நளினமும் கொண்டது. பந்துவீசிய பின்னர், விக்கெட் எடுத்த பின்னர் புன்னகைப்பதில் முரளிக்குத் தோழன். இவர் வீசுவது பந்தல்ல, அக்கினிக்குஞ்சு. அற்புதமான முதுசம் அவுஸ்திரேலியாவுக்கு. டெஸ்ட் -27, விக்கெட் 102, திறமை 5/47, ஒருநாள் -55, விக்கெட் 100, திறமை 5/27.



### டரன் ஸ்கொட் லீமன்

*பிறந்தது* - 05.02.1970
*அணிகள்* - சவுத் ஒஸ்ரேலியா, விக்ரோரியா, யோர்க்ஷயர் (இங்), அவுஸ்திரேலியா.
*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் இந்தியா 97/98.
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் இலங்கை 96/97.


சவுத் ஒஸ்ரேலியாவின் அணித்தலைவர். விளாசித் தள்ளுவதில் வல்லவர். 60 முதற்தர ஆட்ட சதங்களுக்குரியவர். இவர் ஒருவகையில் தெரிவாளர்களால் வஞ்சிக்கப்பட்டவர். விடாமுயற்சியுடையவர். இதுவே அணியில் இவரது உள்வாங்கலுக்குக் காரணம். ஒருநாள் - 85, ஓட்டம் 2285, கூடியது 119, சதம் 3, அரைச் சதம் 11. முதற்தர ஓட்டங்கள் 20,000.

### அன்ரூ சிமண்ட்ஸ்



*பிறந்தது* - 09.06.1975 இங்கிலாந்து.
*அணிகள்* - குயீன்லாந்து, குளோஸ்டர்ஷயர் (இங்), கென்ட் (இங்), அவுஸ்திரேலியா.
வலதுகைத் துடுப்பாட்ட வீரர்.
வலதுகை **OFF BREAK.**
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் பாகிஸ்தான் 98/99.

உலகின் முதன்மையான **HARD HITTER.** அற்புதமான களத்தடுப்பாளர். சிக்சர் அடிப்பது **SINGLES** எடுப்பது மாதிரி இவருக்கு. இங்கிலாந்து **'A'** அணிக்கு அழைப்பு, மறுத்துவிட்டார். ஏற்றிருந்தால் இவரது **PROFILE** இங்கிலாந்து அணி வரிசையில் நிச்சயம் வந்திருக்கும். இவரது ஆசை அவுஸ்திரேலியத் தேசிய அணி. மைதானத்தில் வித்தியாசமாகப் பளிச்சிடுவார். பாகிஸ்தானின் இம்ரான் நசீர் மாதிரி, இந்தியாவின் சோதி மாதிரி.



### ஷேன் கீத் வோர்ன்

*பிறந்தது* - 13.09.1969
*அணிகள்* - ஹம்ப்ஷயர் (இங்), விக்ரோரியா, அவுஸ்திரேலியா.
வலதுகைத் துடுப்பாட்டம்.
இடதுகை **LEG BREAK GOOGLY.**
*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் இந்தியா 91/92.
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் நியூசிலாந்து 92/93.

நட்சத்திரங்கள் சினிமாவில் மட்டுமல்ல. அவுஸ்திரேலிய அணியே ஒரு நட்சத்திரக்கூட்டந்தான். அதில் ஷேன் வோன் துருவ நட்சத்திரம். சாதனைப் புத்தகம் எழுதுபவர்களைத் தொடர்ந்து தொல்லை கொடுத்துக் கொண்டிருப்பவர். உலகின் அதிசிறந்த **LEG SPINNER.** தோல்வியிலும் வெற்றி முத்திரை பதிக்கும் ஆற்றல். அதிரடிக்காகத் திடீரென அணியின் எந்த வரிசையிலும் காணலாம். இவர் ஒரு சகாப்தம். டெஸ்ட் -107, விக்கெட் 491, திறமை 8/71, ஒருநாள் -193, விக்கெட் 291, திறமை 5/31.

## நாளும் ஒரு வினா

**உலகக் கிண்ணப் போட்டிகளில் அதிக பிடிகள் எடுத்த வீரர் யார்?**

**மொய்ன் கான் (பாகிஸ்தான்)**

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# தமிழ் அரசியற் கைதிகளை விடுவிக்குமாறு ஒவ்வொரு முறையும் வலியுறுத்துகின்றோம்

## பேர்ளினில் அன்ரன் பாலசிங்கம் அறிவிப்பு

(பேர்ளின்)

களுத்துறைச் சிறைச்சாலையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கி அவர்களை நீதிமன்றத்துக்குக் கொண்டுவரவேண்டும், இல்லையெனில் அனைவரையும் விடுதலை செய்யவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம்.

ஜேர்மன் பேர்ளினில் நடைபெற்ற 5 ஆம் கட்டப் பேச்சின் பின் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

களுத்துறைச் சிறைச்சாலையில் உண்ணாவிரதம் இருந்துவரும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாகக் கவனம் எடுக்கும்படி கைதிகள் விடுத்திருக்கும் கோரிக்கை தொடர்பாகச் செய்தியாளர்கள் கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, சிறைச்சாலையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்குமாறு கேட்டிருந்தோம்.

இவர்களுக்குப் பொது மன்னிபபுக் கொடுத்து எல்லோரையும் நீதிமன்றத்திற்குக் கொண்டுவரும்படியும், இல்லையென்றால் இவர்களை விடுதலை செய்யுமாறும் நாம் ஒவ்வொரு தடவையும் வற்புறுத்தி வருகின்றோம்.

இவர்களுக்குப் பொது மன்னிப்புக் கொடுப்பது ஜனாதிபதிக்குட்பட்ட அதிகாரம். சம்பந்தப்பட்ட அதிகாரத் தரப்பினர் - சந்திரிகா அம்மையாரிடம் விடுதலை செய்யுமாறு கேட்கப் பயப்படுகிறார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

உயர்பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பாக என்ன பேசப்பட்டது எனக் கேட்டபோது, படையினரை வீடுகளிலிருந்து வெளியேறச் சொன்னால் புதிய முகாம்களை அமைத்துத் துருப்புக்களை நிலைப்படுத்திக் கொண்டு தான் வீடுகளிலிருந்து வெளியேறுவோம் என்று சொல்லுகிறார்கள்.

புதிய முகாம்களை அமைக்காமல் குடியிருப்புக்களிலிருந்து விலகவேண்டும். இவர்கள் பாதுகாப்பு வலயத்திற்கு வெளியே உள்ள பிரதேசங்களிலிருந்து விலகுவதற்கும் மக்கள் குடியமர்வதற்கும் ஒரு கால அட்டவணை கொடுத்திருக்கின்றோம். அதன்படி இவை நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கின்றோம் இல்லையெனில் இந்தப் பிரச்சினையை உரிய வழியில் எழுப்புவோம் என்றார் பாலசிங்கம்.

# கடற்புலி கப்டன் பொதிகைத்தேவன் நினைவுக்கல் திரைநீக்கம் இன்று

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவுக் கடற்பரப்பில் வீரச்சாவடைந்த கடற்புலி கப்டன் பொதிகைத்தேவனுக்கு இன்று வடமராட்சியில் மக்கள் அஞ்சலி செலுத்தவுள்ளனர்.

கடற்புலி கப்டன் பொதிகைத்தேவனின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தி இன்று 12.30 மணியளவில் - மாவீரர் பொதிகைத்தேவனின் வீட்டில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு, பிரதான வீதி ஊடாக நெல்லியடிச் சந்தியை சென்றடையும்.

அங்கு நண்பகல் 1.00 மணியளவில் வீரவணக்கக் கூட்டம் நடைபெற்று அதன்பின்னர் பிரதான வீதி ஊடாக பருத்தித்துறை சென்றடைந்து, அங்கும் பிற்பகல் 2.00 மணியளவில் வீரவணக்கக் கூட்டம் இடம்பெற்று,

அதன்பின்னர் மேஜர் ரஞ்சன் பூங்கா சந்தி ஊடாக நாவலடிச் சந்தியைச் சென்றடையும் திருவுருவப்பட ஊர்வலம், அதன்பின்னர் வியாபாரிமூலைச் சந்திக்குச் சென்று, அதன் ஊடாக சுப்பர்மடம், சக்கோட்டை, இன்பருட்டிக்கு சென்றடையும்.

அங்கு அஞ்சலிக்கூட்டம் நடைபெற்று, பொலிகண்டி, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டிச் சந்தி ஊடாக எல்லங்குளம் மாவீரர் துயிலும் இல்லம் சென்றடைந்து பிற்பகல் 6.00 மணியளவில் அங்கு நினைவுக்கல் திரைநீக்கம் செய்யப்படும்.

# ஆயுதப்படகுகளைக் கைப்பற்றினால் உறுதிக் கடிதம் பெற்று விடுவிக்குக!

## ஜனாதிபதி சந்திரிகா உத்தரவு

புலிகளின் ஆயுதப்படகுகளைக் கடற்படையினர் கைப்பற்றினால் - அதிலுள்ள ஆயுதங்களைப் பறிமுதல் செய்துவிட்டு, இனி அவ்வாறு நடந்து கொள்ளமாட்டோம் என்று உறுதிக் கடிதம் பெற்ற பின்னர் படகுகளை விடுவிக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா கடற்படையினருக்கு உத்தரவிட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

இதுவரை கடலில் ஆயுதங்களுடன் கைதாகும் புலிகளை நீதிமன்றத்தில் நிறுத்தவே உத்தரவிடப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

### உரிய தீர்வை....

தொடர்ந்தும் பேச்சுக்களில் கலந்துகொள்வது எமது சமாதான மூலம் தீர்வு பெறும் இலக்கையே காட்டுகிறது. ஆனால் அரசாங்கம் சரியான தீர்வைத் தராவிடில், தேசியத் தலைவர் சொன்னதுபோல பிரிந்து சென்று தனியாட்சி அமைப்பதைத் தவிர எமக்கு வேறுவழியில்லை என்பதையே நாம் குறிப்பிட்டுச் சொல்கின்றோம் என்றார்.

ஐயாயிரத்துக்கும் அதிகமான மக்கள் கலந்துகொண்ட இந்நிகழ்ச்சியில் சு.ப.தமிழ்ச்செல்வன், கருணா ஆகியோரும் உரையாற்றினர்.

இதேவேளை, பேர்ளினில் நடைபெற்ற பேச்சுக்களின் முடிவில் நேற்றுமுன்தினம் பத்திரிகையாளர்களைச் சந்தித்த கலாநிதி அன்ரன் பாலசிங்கம் -

இனிவரும் காலங்களில் பேச்சுக்களில் எடுக்கப்படுகின்ற முக்கியமான முடிவுகள் குறித்து தினமும் பத்திரிகையாளர்களுக்கு அறிவிப்பதென்று தாம் முடிவு செய்திருப்பதாகத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - பேச்சுவார்த்தை ஆரம்பமாகிய போது ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டது. பேச்சுக்கள் முற்றுமுழுதாக முடிவடைந்த பின்னரே, பத்திரிகையாளர்களை அழைத்து மாநாடு கூட்டப்பட வேண்டும். அதன் பின்னர், தனியாகவோ அல்லது குழுவாகவோ பத்திரிகையாளர்களுக்குப் பேட்டியளிக்கலாம் என்று தீர்மானிக்கப்பட்டது.

ஆனால், அரசதரப்பினர் தொடர்ச்சியாக இதை மீறி வருகின்றனர். ஏனெனில், அவர்கள் ஒவ்வொரு நாளும் இரகசியமாகத் தமக்குத் தெரிந்த பத்திரிகையாளர்களைச் சந்தித்து, விபரங்களைக் கூறுகின்றனர்.

இதை நாங்கள் பேச்சுவார்த்தை மேசையிலும், 'உங்களுக் கொரு சட்டம் எங்களுக்கொரு சட்டமா' என எடுத்துச் சொன்னோம். அப்படியென்றால் நாங்களும் பத்திரிகையாளர்களைச் சந்தித்து விபரங்களைத் தெரிவிப்போம் என்று கூறினோம்.

இதன்பின்னர் ஒரு இணக்கத்திறகு வந்துள்ளோம். தேவையான முக்கியமான விடயங்களைச் சொல்லலாம் என்றும், இனிமேல் ஒவ்வொரு நாளும் பேச்சுக்களின் பின்னர் முக்கியமான முடிவுகள் எடுக்கப்பட்டால், பத்திரிகையாளர்களைச் சந்திப்பதென்றும் நாங்கள் தீர்மானித்திருக்கிறோம் என்றும் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

### அரசாங்கமும்...

ரமாதேவி பூங்காவில் நடைபெற்ற வைபவத்தின் பின்னர் வோல்ரர் எல். வில்சன் செய்தியாளர்களிடம் பேசும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நிரந்தர சமாதானம் ஏற்பட்டால் மாத்திரமே இலங்கையில் அபிவிருத்தியைக் காணமுடியும். இவ்விடயம் குறித்து இலங்கை அரசுக்கும் புலிகளுக்கும் எடுத்துக் கூறியுள்ளோம்.

சமாதானப் பேச்சுவார்த்தையின் போது, அவ்வப்போது ஏற்படும் சில முரண்பாடுகள் சகஜமானவை. அதனை இருதரப்பும் உணர்ச்சிவசப்பட்டுப் பெரிதுபடுத்தி விடக்கூடாது. நெடுந்தீவில் இடம்பெற்ற சம்பவமும் அவ்வாறான ஒரு முரண்பாடு காரணமாகவே இடம் பெற்றது.

ஆனாலும், இவ்வாறான சம்பவங்கள் எதிர்காலத்திலும் இடம்பெறாத வகையில் விடுதலைப் புலிகளும் அரசும் மிகவும் அவதானமாக செயற்பட வேண்டும். அவ்வாறு செயற்படுவார்கள் என்ற நம்பிக்கை எமக்குள்ளது.

- என அவர் மேலும் தெரிவித்தார். (200)

### புலிகளுக்கு...

ஆயுதக் கப்பலும் கண்டுபிடிக்கப்படவில்லை. அவ்வாறு வெளியான செய்திகள் தவறானவை என இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

### காணியை...

இருந்ததாகவும் தெரிய வருகின்றது.

எலும்புக்கூடு மீட்கப்பட்ட காணிககு அருகில் மூன்று மண்டை ஓடுகள் சில மாதங்களுக்கு முன்னர் கண்டு பிடிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(34)

### புலிகளின்...

வரும் விடயங்களை, விடுதலைப் புலிகளின் தலைமையுடன் கலந்தாலோசித்து - இது தொடர்பான விடயங்கள் முன்னெடுக்கப்படும் எனத் தெரிய வருகின்றது.

### கண்காணிப்புக்குழு...

தேவையில்லை.

இத்தகைய தகவலை வெளியிடுவதற்கு முன்னர் இலங்கைக் கடற்படையுடனோ, இராணுவப் பேச்சாளருடனோ அல்லது இந்திய அதிகாரிகளுடனோ கலந்தாலோசனை செய்திருக்கலாம் என்றும் இந்தியத் தூதரக வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

# நெடுந்தீவுச் சம்பவங்கள் தொடர்ந்தால் மக்கள் போராட்டம் முன்னெடுக்கப்படும்

## யாழ். பொது அமைப்புக்கள் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கண்காணிப்புக் குழுவின் அசமந்தப்போக்கும் கடற்படையின் அடாவடித்தனங்களுமே நெடுந்தீவுச் சம்பவத்துக்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளன. இப்படியான சம்பவங்கள் தொடருமானால் நாம் எம்மை அர்ப்பணித்து மக்கள் தழுவிய போராட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டிய நிலை ஏற்படும் என்று வடபகுதியில் செயற்படும் பல்வேறு வெகுஜன அமைப்புக்கள் அறிவித்துள்ளன.

நெடுந்தீவுச் சம்பவம் தொடர்பாக வடபகுதியில் இயங்கிவருகின்ற பல வெகுஜன அமைப்புக்கள் கவலையையும் கண்டனத்தையும் தெரிவித்து அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.

வலிகாமம் வடக்கு வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம், யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம், வலி. தென்.மேற்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம், வடமாகாண கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் ஆகியவை உட்பட பல்வேறு பொது அமைப்புக்கள் நெடுந்தீவுச் சம்பவம் தொடர்பாக கண்டன அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.

### கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

உடுவில், தெல்லிப்பளை பிரதேசத்திற்குட்பட்ட சகல பொது அமைப்புக்களுக்குமான கலந்துரையாடல் நாளை 4 மணிக்கு சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் கூட்டுறவுச்சங்கங்கள், சனசமூகநிலையங்கள், வர்த்தக சங்கங்கள், ஆலய நிர்வாகங்கள், சிகை அலங்கரிப்பாளர் சங்கங்கள், விவசாய சம்மேளனங்கள், மாதர் முன்னேற்ற சங்கங்கள், தனியார் கல்விநிலைய நிர்வாகங்கள், ஏனைய பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளைத் தவறாது கலந்துகொள்ளும்படி பிரதேசப் பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

# இன்னும் சில தினங்களில் நம்பியாரின் அறிக்கை!

## அவரே மட்டக்களப்பில் தெரிவிப்பு

(கொழும்பு)

உயர்பாதுகாப்பு வலயங்கள் குறித்த தனது இறுதி அறிக்கை இன்னும் சில தினங்களில் கையளிக்கப்படும் என ஜெனரல் சதீஸ் நம்பியார் தெரிவித்துள்ளார்.

வட- கிழக்குப் பகுதிகளிலுள்ள உயர்பாதுகாப்பு வலயங்கள் குறித்த தரவுகளை நேரடியாகச் சேகரித்துள்ளதாகவும் இதனடிப்படையிலேயே தாம் அறிக்கையைக் கையளிக்கப் போவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மட்டக்களப்பிலுள்ள கல்லடி, வாழைச்சேனை, மொறக்கொட்டாஞ்சேனை, கொம்மாந்துறை ஆகிய பகுதிகளில் உள்ள உயர்பாதுகாப்பு வலயங்களைச் சென்று பார்வையிட்ட பின்னரே ஜெனரல் நம்பியார் இத்தகவலை வெளியிட்டார்.

# உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

## மேற்கிந்தியத்தீவுகள் அணி எதிர் தென்னாபிரிக்க அணி

### மேற்கிந்தியத்தீவுகள் அணி

| வீரர்கள் | ஓட்டங்கள் | பந்துகள் | நான்குகள் | ஆறுகள் |
|---|---|---|---|---|
| கைல் | 2 | 21 | 0 | 0 |
| ஹிண்ட்ஸ் | 0 | 16 | 0 | 0 |
| லாரா | 116 | 134 | 12 | 2 |
| சந்தர்போல் | 34 | 60 | 3 | 0 |
| ஹுப்பர் | 40 | 40 | 3 | 0 |
| பவல் (ஆ.இ.) | 40 | 18 | 5 | 1 |
| சர்வான் (ஆ.இ.) | 32 | 15 | 2 | 2 |
| உதிரிகள் | 14 | | | |
| மொத்தம் 50 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு - 278 | | | | |

### பந்து வீச்சு -தென்னாபிரிக்க அணி

| வீரர்கள் | ஓவர் | கன்னி ஓவர் | ஓட்டங்கள் | விக்கெட்டுக்கள் |
|---|---|---|---|---|
| பொல்லக் | 10 | 2 | 52 | 2 |
| என்ரினி | 10 | 1 | 37 | 2 |
| டொனால்ட் | 9 | 0 | 54 | 0 |
| கலிஸ் | 10 | 2 | 52 | 0 |
| குளூஸ்னர் | 8 | 0 | 53 | 1 |
| போயே | 3 | 0 | 24 | 0 |

நடுவர்கள் : கார்ப்பர், எஸ்.வெங்கட்ராமன்
மைதானம் : கேப்ரவுண்

### தென்னாபிரிக்க அணி

| வீரர்கள் | ஓட்டங்கள் | பந்துகள் | நான்குகள் | ஆறுகள் |
|---|---|---|---|---|
| கிப்ஸ் | 24 | 28 | 4 | 0 |
| கேர்ஸ்ரன் | 69 | 92 | 6 | 1 |
| டிப்பென்னர் | 20 | 25 | 2 | 1 |
| கலிஸ் | 13 | 18 | 2 | 0 |
| றொட்ஸ் | 2 | 6 | 0 | 0 |
| பவுச்சர் | 49 | 49 | 4 | 1 |
| பொல்லக் | 4 | 4 | 0 | 0 |
| குளூஸ்னர் | 57 | 48 | 1 | 5 |
| போயே | 25 | 25 | 2 | 0 |
| என்ரினி | 0 | 2 | 0 | 0 |
| டொனால்ட் | 0 | 0 | 0 | 0 |
| உதிரிகள் | 12 | | | |
| மொத்தம் 49 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு - 275 | | | | |

### பந்து வீச்சு - மேற்கிந்திய அணி

| வீரர்கள் | ஓவர் | கன்னி ஓவர் | ஓட்டங்கள் | விக்கெட்டுக்கள் |
|---|---|---|---|---|
| டிலோன் | 10 | 0 | 47 | 2 |
| கொலின்ஸ் | 9 | 0 | 54 | 1 |
| டிரேக்ஸ் | 8 | 1 | 33 | 2 |
| ஹுப்பர் | 10 | 1 | 60 | 2 |
| கைல் | 10 | 1 | 60 | 2 |
| பவல் | 2 | 0 | 14 | 0 |

உலகக் கிண்ண கிரிக்கெட் - 2003 இல் நேற்று நடந்த சுவாரசியமான முதலாவது போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் தென்னாபிரிக்காவை 3 ஓட்டங்களால் வென்றது.

*ஆட்டத்தின் சிறப்பாட்டக்காரர் - பிறைன் லாரா*
*மேற்கிந்தியத்தீவுகள் பெற்ற புள்ளிகள் - 04*

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 10.02.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.